ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

# திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 2 | காஞ்சிபுரம் 20—2—44 சுபானு மாசி 7—ஞாயிறு | இதழ் 49.

## மதுரை, சைவ சபையும், கலியாணசுந்தரரும்.

மகாபண்டிதர் கலியாணசுந்தரரைக் குற்றம் சொல்லிக்கொண்டே இருக்கிறேன் என்று பண்டிதர்களும் மற்றவர்களும் நினைக்கலாம். குற்றம் சொல்லுவது ஏன் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

எவர் மனமும் புண்படக்கூடாது. அதிலும் பெரியவர்கள் மனம் புண்படக்கூடாது என்பது எனக்குத்தெரியும். அவர்கள் சுத்த மனதின் எதிரொலி கெடுதலையுண்டுபண்ணும் என்பதும் எனக்குத்தெரியும். எங்கள் விஷயத்தில் முதலியார் மனமெல்லாம் காய்ப்புக் காய்த்தும், எங்கள் எதிரியிடம் போயும் விட்டதால் நான் புண்படுத்தும்படியான இடம்அவர்மனதில்இல்லை.அவர்பக்கமிருப்பவர்களை நினைக்கவேண்டுமேயென்றால் எங்களவர் எங்களுக்கே சகசத்துருவாயிருக்கையில் அவருக்குப்பதில் சொல்லாவிட்டால் எங்கள் கொள்கைக்கும் கட்சிக்கும் நாங்களிருப்பதில் பலனென்ன?

சுயமரியாதைச்சங்கம்உண்டானகாலம் முதற்கொண்டு சைவப் பண்டிதர்கள் வேதாந்தப்பண்டிதர்களை எல்லாம்கூட்டித்தானும்சேர்ந்து சபைகள்கூட்டிஎவ்வளவோ குற்றம் சொன்னார். காங்கிரஸ் மேடையில் காவியம், ஓவியம், கம்பர்கவி இன்பமென்று பிரசங்கமும் செய்தார். அப்பொழுதுகவர்னராகயிருந்த கோஷன் பிரபுவையும் பார்லிமெண்டு தோரணையில் எங்களை அழிக்கக்கூப்பிட்டார். அவர் சொன்ன அத்தனைக்கும் ஒன்றுவிடாமல் நாங்களும் நியாயமாக ஊர்த்தமிழில் பதிலெழுதினோம். அவரவர்கள் நியாயம் அவரவர்களுக்கு என்றாலும் உண்மை நியாயத்தால் அதை அளந்து அளவுகாட்டும் முறையில் அவர் பத்துவரிகூட எழுதவில்லை. எங்கள் நியாயம் மாயமந்திரஇருளில் ஒளித்துக்கொள்ளுவதில்லை. திறந்த வெளியில் எல்லோரும் காணும்படியாய் இடப்பதால் பயமில்லை. முதலியார் எங்கள்பேரில் எடுத்த படை எல்லாம் எங்களை அழுத்தந்திருத்தமாக எழுதவும் சொல்லவும் பலர் படிக்கவும் ஏதுவான நன்மையைத்தான் செய்தது. இதனால் நன்றி செலுத்த நியாயமில்லை.

தோழர் முதலியார் அவர்கள் எங்களவர். படித்தவர், எங்கள்வழி அவசியமானது உண்மையுள்ளது என்று அவருக்குத் தெரியும். எங்களைவிட நம்முடையகாரியங்களை எடுத்துச்சொல்லும் திறமுடையவர். இவரை அன்னியனுக்கு ஆளாக்கிவிட்டிருப்பது வருந்தத்தக்கதல்லவா? ஒருவன்பெண்ஜாதியை வேறொருவன் சேர்த்துவாழ்வது அவர்களோடு தொலையும். இதுஅப்படியல்லவே ஒருசமூகத்தின் உயர்விற்கே தொந்தரவு கொடுக்கிறது. முன்பல பண்டிதர்கள் உண்மை உணராமல் பார்ப்பார்களுடைய ஏமாற்றுகளுக்குத் துணைபுரிந்தார்கள். இவர் உண்மைதெரிந்தும் பார்ப்பாருக்கு துணை போய்த் துணையே ஆகிவிட்டால் இவரை எப்படிக்குற்றம்சொல்லாமலிருப்பது.

தியாகராஜசெட்டியார் டாக்டர்நாயர் இவர்களால் ஏற்பட்டது ஜஸ்டிஸ்கட்சி. பார்ப்பார்களே உத்தியோகத்தில் அதிகமிருக்கிறார்கள் ஆனதால் உத்தியோகம் எல்லாச்சமூகங்களுக்கும் சமமாக இருக்கவேண்டும்என்பது ஜஸ்டிஸ்கட்சியின் கொள்கையில்முக்கியபாகம். அந்தமுக்கியத்தைத் துலைப்பதே பார்ப்பார்களின்தேசியம். அதற்காகத்தேசபந்து என்கிற ஒருபத்திரிகையைஉண்டுபண்ணி முதலியாரை அதில் முதன்மைவகிக்கச் செய்தார்கள். அந்தப்பத்திரிகையில் பார்ப்பாரல்லாதாரைத் திட்டினதிட்டும் சொன்னகுற்றமும் இருபத்தைந்து வருடமாய்விட்டதால் இப்பொழுதுஉள்ள வாலிபர்களுக்குத்தெரியாது. பார்ப்பார்கள் திருப்திப்பட்டுப் பெருமைகொடுக்க வேண்டும். அந்தப்பெருமையே உலகத்திலுமிருக்கிறதுஎன்ற நோக்கேஒழிய, தன்காடு புறங்காடுகிடையாது. அவைகளைப்படித்தஞாபகம் எனக்கு இன்றுமிருக்கிறது.

பார்ப்பார்கள் மற்றவர்களுக்குக் கிடைக்கவேண்டிய உத்தியோகவழியை அடைக்கஎடுத்த ஏற்பாட்டுக்கு முதலியாரும் ஒருசேனாதிபதி. அந்தவழியை அடைத்தேதீருவேன் என்கடன்பணி செய்துகிடப்பதேஎன்று அவர்சொல்லுவதுபோல் அந்தவழியில் பெரியதடியை எடுத்துநின்றார். பல குடும்பங்களுக்கு அன்று அவர்செய்ததீங்கின்புண்கள் இனியும் ஆறியிருக்காது. இவரால்காரியம் முடிந்தஉடன் இவரைநீக்கி அந்தஇடத்தில்V.சுப்பிரமணியஅய்யர்என்பவரைநியமித்துக்கொண்டார்கள். சீனிவாசஅய்யங்காரிடம்சேர்ந்துகொண்டு எலக்ஷனில் ஜஸ்டிஸ்கட்சியைத் தோற்கடிக்க அரும்பாடுபட்டார். எதிலும் முதல் பந்திபார்ப்பாருக்குத்தானே. அதுபோல முதலியாரைக் காங்கிரசிலும் கடைப்பந்திக்கு தள்ளிவிட்டார்கள்.

சைவர்களே! மதுரை சைவசித்தாந்த சபையில் இவர் தலைமையில், கம்பர்செய்த புரட்சியும், சைவம் தழைக்கவும் நிலைநாட்டவும் அரசியல் அதிகாரம் வேண்டுமென்பதுதானா சைவசித்தாந்தம், இவைகள் சைவசித்தாந்த நூல்களிலிருக்கின்றதா? இதனால் சைவம் துர்பலப்படுமேயல்லாமல் சைவதத்துவங்கள் விளங்குமா? சைவ உண்மைகள் விளங்கத்தானே சைவசபை கூட்டுவது? சைவசபையில் இராமாயணத்தைக்கேட்டும்எப்போதோ வரும் எலக்ஷனுக்குஅடிப்போடுவதாகப் பார்ப்பார்கள் நினைத்தும் பார்ப்பார்கள் முதலியார் அவர்களே போட்டி என்று சொல்லலாம். இராமாயணத்தைக் குற்றம் சொல்லும் நாங்கள் சபையில் நியாயமில்லாததைத்தடுத்துச் சொல்லித்தானேதீரவேண்டும். நாங்கள் கல்வி அறிவில்லாதவர்களாகவிருந்தாலும் இராமாயணத்தைப் படிக்காதவர்களாகயிருந்தாலும், எட்டிலுள்ளதையே சொல்லுவோம்.

சீதை அசோகவனத்திலிருக்கும்போது அனுமார் சீதையைக்கண்டு இராமரிருக்குமிடத்திற்குநான் அழைத்துச் செல்லுகிறேன் என்னுடன் வாவென்றுகூற,அவள் வரமுடியாது என்று சொல்லுவதற்குப்

(2ம் பக்கம் பார்க்க)

## மதுரை சைவ சபையும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிலாகத்தான் பொன்மயமாகவிருக்கும் இலங்கையை எலும்புமயமாக மாற்றுவதற்குத்தான் நானிங்குவந்திருக்கிறேன் என்றும் என்னை மணந்தகாதலன் என் எண்ணத்தை நிறைவேற்றுவானென்றும் சீதைகூறியதாகக்கம்பர்பெருமான்புரட்சி செய்திருக்கிருர். இப்பேற்பட்ட திறமை வாய்ந்த கவிகள் காவியத்தில் பண்ணும் புரட்சியைப்போல் வேறுபுரட்சி எதுவும் செய்ய இயலாது என்று சைவ சபை சொல்லுகிறது.

ஆரியர்களைஉயர்த்தவும்,மற்றவர்களைத் தாழ்த்தவும் யாகத்தின் விரோதிகளை அழிக்கவும் வடதேசத்து தென்தேசத்து இராஜாக்கள் போட்ட ஒரு சிறு சண்டையைக் கற்பனையால் பெருக்கி வால்மீகி எழுதின கற்பனைக் கதையை கம்பர் அதுதெய்வாம்சமென்றும், அதில் கண்டவர்கள் தெய்வங்களென்றும் அந்தத் தெய்வங்கள் பிராமணர்களைப் பக்கம் வைத்து வணங்கிக்கொண்டிருந்ததென்றும், மூலக்கதையான வால்மீகத்திற்கு நேர்விரோதமாக எழுதிப்பார்ப்பார்களை பூசுரர்களாகச்செய்த கம்பர் புரட்சிக்கு, மேற்பட்டபுரட்சிஇல்லவே இல்லைத்தான். எப்பொழுதும் பார்ப்பார்களை மனதில் நினை என்ருர் கம்பர். நான் சூத்திரன் என்ருர் சேக்கிழார், பௌத்தர்களுக்கு இராமாயணமும் சமணர்களுக்குப்பெரிய புராணமும் புரட்சி உண்டுபண்ணின மாதிரிவேருேர் புரட்சி இருக்கமுடியாது தான். புத்தன்கதை இராமாயணத்திலிருக்கிறது. புத்தன் முந்தியா? இராமன் முந்தியா என்பதை இராமாயணம் சரியாகப்படித்த சோமசுந்தரபாரதியாரைத் தான் கேட்கவேண்டும்.

மதுரைச் சைவ சித்தாந்த சபைக்குக் கம்பர்புரட்சி எதற்கு, காவியப்புரட்சியால் சைவம் காவியத்திற்குள்ளல்லவா போய்விடும். அதிலும், அனுமான் சீதை இரண்டும் கற்பனையால் உண்டுபண்ணப்பட்ட ரூபங்கள், இதுகளுடைய சம்பாஷணை தினமும் எல்லா வீதிகளிலும் சம்பாஷிக்கப்பட்டே வருகிறது. என்புருஷன் வரட்டும் குடலைப்பிடுங்கி மாலையாகப்போடச் சொல்கிறேன். எங்கவீட்டுக்காரன் வரட்டும் வீட்டைஎல்லாம் சுட்டுத்தரைமட்டமாக்கச்செய்கிறேன் என்ற சம்பாஷணைகளை எவரும் கேட்டிருப்பீர்கள். அதை நினைத்துக்கொண்டுதான் அவருமிருக்கிருர்.

சைவசபையில் கம்பர் புரட்சி அவசியமென்று பண்டிதர்களின் ஆராய்ச்சித் திறமையில் உண்டாயிருக்கலாம். இராமாயணத்தில் ஒரு பெரும் புரட்சி இருக்கிறது, அதையும் பண்டிதர்கள் சைவசபையில் சொல்லியிருந்தார்களானல்ஆராய்ச்சியிலும்அறிவிலும் உண்மைவிளங்கி இருக்கும்.

சம்புகன்என்கிற சூத்திரன் தவசுசெய்தான், அதனல் ஒரு பிராமணப்பையன் செத்துப்போனன் என்று இராமரிடம் சொன்ஞர்கள். உடனே இராமர் அந்தச் சம்புகனை வெட்டினுர், பிராமணப் பையன் உயிர்பெற்ருன். பார்த்தீர்களா சைவர்களே இராமாயணத்தின் புரட்சியை! இந்தப்புரட்சியை இப்பொழுது எடுத்துக்கொண்டால் மடாதிபதிகளிலிருந்து எல்லாச்சைவர்கள்தலையும்போகவல்லவாவேண்டும். எந்தஆராய்ச்சிபுரட்சி பண்டிதன் தலையும்போகவேண்டுமே. முதல்தலை எங்கள் கலியாணசுந்தரஞர் தலைதான்போகவேண்டும். எனெனில் தவம்கிடக்கவேண்டுமென்று சொல்லுகிறவர் அவர்தான். இவர்களெல்லாம் சூத்திரர்கள்தானே? இப்பொழுது வெள்ளைக்காரர்கள் புரட்சியில்அவரவர்கள்தலை அவரவர்கள் உடம்பிலேயிருக்கிறது.

இராமாயணமே கற்பனைக்கதை என்பதை எத்தனையோதரம் எழுதியாய்விட்டது. அனுமானும் சீதையும் அக்கதையிலுள்ள கற்பிதங்கள். சீதை பூமியில்கிடந்த குழந்தை. இதை ஜனகன் எடுத்துவளர்த்தான். தாய்தகப்பனையாருக்கும்தெரியாது. இராமாயணம் உண்டாவதற்கு எழுதப்பட்ட கதைப்படி லட்சுமி அங்கு வந்து குழந்தையாகவுமிருக்கலாம்;எப்படி ஆனலும் கற்பிதந்தானே? கேசரிஎன்கிற இராட்சதனுக்கு அஞ்சனை என்கிற ஒரு பெண். கேசரி என்கிறவானரம் அந்தப் பெண்ணை கலியாணம்செய்தது.குழந்தை இல்லாததால் அஞ்சனை தவசுக்கும் போனன். வாயுபகவான் அஞ்சனைக்கு உபசரணைசெய்துகொண்டிருந்தார் பார்வதி பரமேஸ்வரன்குரங்குரூபமெடுத்துப் போகித்தார்கள். அதில் சிந்தினஇந்திரியத்தை அஞ்சனைக்கு வாயுபகவான் கொடுத்தார். அனுமார் பிறந்தார். இதுவும்கற்பனைதானே! இராமாயணத்தைப் படிக்காமல் பிதற்றுகிறவர்களுக்கு இந்த கதைதான்தெரியும். இதுசரியா? தப்பா? இன்னும் கதைஉண்டா? என்பது சோமசுந்தரபாரதியாருக்குத்தெரியும் அவர் சொல்லட்டும். அவர் இராமாயணத்தையும்தெரிவோம். இங்ஙனம்.

கைவல்யம்.

——

## சுயமரியாதைத் திருமணம்.

அரக்கோணத்தைஅடுத்த தக்கோலம் கிராமத்தில், தோழர் ஜலநாதன் அவர்களுக்கும் தனலட்சுமி அம்மையாருக்கும் சுயமரியாதைத் திருமணம், 14—2—44 காலை காஞ்சிபுரம் தோழர் A. இரத்தின முதலியார் அவர்கள்தலைமையில் நடைபெற்றது. தோழர் அண்ணுத்துரை, திருமணத்தில் சீர்திருத்தம் எனும்பொருள் குறித்துப்பேசினர். தக்கோலம் தோழர் செல்லப்பா வந்தனங்கூறினர்.

உத்தமபாளையம்

## சோமசுந்தரனர் பிரிவு.

உத்தமபாளயம் பிரபலஸ்தரும் சர். பி. டி. ராஜன் அவர்களின் சித்தப்பாவுமான தோழர் எம். டி. சோமசுந்தர முதலியார் அவர்கள், மதுரை நகர் தல்லாகுளத்திலுள்ள "பாளையம் ஹவுசில்" சென்ற 25ல மாலை காலமானர். இறக்கும்போது அவருக்கு வயது 72.

காலஞ்சென்ற முதலியார் அவர்கள், வைதீகமிகுந்த தொண்டை மண்டலமுதலியார் வகுப்பைச் சேர்ந்தவராயினும், சமூக சீர்திருத்த விஷயத்தில் பரந்த நோக்கங்கொண்ட அறிஞர். அவர் தலைமைவகித்துச் சில கலப்பு மணங்களை நடத்திவைத்திருக்கிருர். 2000 மக்கள் பின்தொடரமயானத்துக்குப்பிரேதத்தை எடுத்துச்சென்ருர்கள். மதுரை நகரசபைத்தலைவர் ராவ்பகதூர் பி. ரெங்கசாமி நாயுடு, காலஞ்சென்ற பெரியாரின் உயர்ந்த குணங்களைப்பாராட்டிப் பேசினர்.


## பெரியார் பெருந்தொண்டு.

எதிர்பாருங்கள்!

(அச்சில்) விரைவில் வெளிவரும்!

தமிழ் நாட்டின் தனிப்பெருந்தலைவர்பெரியார் ஈ.வெ.ரா.அவர்களின் அரும் பெருந்தொண்டு (இந்தி எதிர்ப்பு முடிய)ச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் உணர்த்தும் ஒரு சிறு கவிதை நூல். நல்ல தாளில் அழகியப்பதிப்பாக வெளிவருகிறது. ஆக்கியவர் தமிழாசிரியர் S. சிவப்ரகாசம் அவர்கள்.

கிடைக்குமிடம்:

"பூங்கோடி" பதிப்பகம்,

43- சேன்த்தெரேஜ் மடத்துவீதி,

புதுச்சேரி.


## பெரியாரால் பெயரிடப்பட்டது.

1944 பிப்ரவரி திங்கள் 12 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நமது இயக்க அன்பர் சேலம்பிரபல போட்டோ வியாபாரி திரு: K. கொண்டய நாயுடு அவர்கள் பேரன்மார்கள் இருவருக்கும் முறையே திராவிடமணி! அன்புமணி!! என்று நமது இயக்கத்தலைவர் பெரியார் E.V.R. அவர்களால் பெயரிடப்பட்டது.

குழந்தையின் ஞாபகார்த்தமாக நமதியக்கப்பத்திரிகை, 'குடிஅரசு' 'திராவிடநாடு' இவைகளுக்கு முறையே ரூபாய் 2 வீதம் நன்கொடை தரப்பட்டது.

## கலையின் நிலைகுறித்து அண்ணாத்துரை பேச்சு

(6-ம்பக்கத்தொடர்ச்சி.)

கைய ஈனத்தனமான காரியமாக இதனைக் கருதுவோமா என்று அவரைக்கேட்கிறேன். மற்றொன்று கூறுகிறேன், அவருக்கும் கலாரசிகருக்கும். கண்டனத்தின் அறிகுறியாக நாங்கள் மேற்படி ஏடுகளைத் தீயிலிடும்போது, "நிறுத்தப்பா! 63-ம் பக்கத்திலே, அழகான ஒரு வர்ணனை இருக்கிறது, ஆற்றின் வருணனை, அதிலே அருமையான கலை இருக்கிறது" என்று கலாரசிகர்கள்கூறட்டும், அந்த ஏட்டைக் கிழித்தெடுத்துக்கொள்வோம். "93-ம் பக்கத்தைக் கொளுத்தாதே, அதிலே மக்களுடைய வஞ்சகஎண்ணத்துக்கும் காளுறுக்கும் உவமை, அழகாகக் கூறப்பட்டிருக்கிறது, அது அபூர்வமானகலை" என்றுகூறட்டும், அந்தப் பகுதியைக்கொளுத்தாதுவிடுவோம், ஆபாசம்நிறைந்த அறிவுக்குப்பொருந்தாத, இனச்செருக்கை வளர்க்கிறமற்றப் பகுதிகளைக் கொளுத்துவோம், கலாரசிகர்கள் இதற்குச் சம்மதிக்கின்றனரா என்றுகேட்கிறேன். எந்தப்புராணத்திலும் மூடப் பழக்கவழக்கங்களை வளர்க்கும் பகுதிகளும் உள்ளன. அதுபோலவே கலையழகுள்ள பகுதியும் இருக்கின்றன என்று சர். சண்முகம்கூறினார். அவர்போன்ற பேரறிவாளர்களால், இந்தப்பகுபாடு தெரிந்துகொள்ள முடியும். பாமரரால் முடியாது. இங்கோ 100க்கு 90பேருக்கு மேல் தற்குறி. கலாரசிகர்கள் இப்புராண இதிகாசங்களினின்றும், கலையழகுப்பகுதிகளை எடுத்துத் தொகுத்து வெளியிடட்டும், நாங்கள் அதனைவரவேற்கிறோம். இக்காரியத்தைச்செய்ய இதுவே சரியான சந்தர்ப்பம். எனக்குங்கூட, நமது சண்முககம்பெனியார் நடத்தும் புராண நாடகங்களிலேகூடச்சில ரசங்கள் தென்படுகின்றது. அவர்களின் கந்தலீலா நாடகத்திலே, திருத்தணிகைமலைக் காட்சி காட்டப்படுகிறது. கோயில் புரோகிதர், "இந்தப் பாழாப்போன சாமி கீழே இருக்கக்கூடாதா? மேலேபோய் உட்கார்ந்துகொண்டு என்உயிரை வாங்குகிறது" என்றுகூறுகிறார் சலிப்போடு. இது சுயமரியாதைப் பிரசாரத்துக்காக அவர்கள் புகுத்தவில்லை. வெறும் நகைச்சுவைக்காகவோ, அல்லது கோயில் அர்ச்சகர்களின் சுபாவம் இப்படித்தான் இருக்குமென்று பொதுமக்கள் கருதுகிறார்கள் என்பதை விளக்கவோ இதனைப் புகுத்தியிருக்கிறார்கள். கந்தலீலா எனும் புராணநாடகத்திலே, எனக்குச் சுவைதரும்பாகம் இதுதான். இதுபோலவே தோழர் பகவதி, இராவணனாகவோ, இரணியனாகவோ, சூரபதுமனாகவோ, கம்சனாகவோ, நடிக்கும்போதெல்லாம், என்கண்களுக்கு ஒரு திராவிட வீரன்போலவே காணப்படுகிறார். பேச்சு, நடை, நடிப்பு, முடுக்கு முதலியன, அப்படித்தான் என்கண்களுக்குத் தெரிகிறது. சர். சண்முகமும் எப்படிப் புராணங்களிலும், சிலநற்சுவையுள்ள பகுதியைக் காண்கிறாரோ அதுபோலவேநானும், புராண நாடகங்களிலும் சில சுவைகள் காண்கிறேன். ஆனால் நாடகத்தைக் காண்பது, நானும் சர். சண்முகமும் மட்டுந்தானா? மக்கள் காண்கின்றனர், அவர்களால் இப்பாகுபாட்டை உணரமுடிகிறதா? ஆபாசக்கருத்துகளைக் கொள்ளாமல் இருக்கமுடிகிறதா? நமது முதலாளிசாயபுஇருக்கிறார், அவர்இராமாயண நாடகத்தைப் பார்த்தானதும், ராம! ராமா! என்றுபஜிக்கமாட்டார், அவருக்கு, அல்லாதான்தெய்வம்,கொரானே வேதம்.எனவே இராமாயணநாடகம் பார்ப்பதால், இராமனைத் தெய்வமென்றுகொள்ளும், மனப்பான்மை அவருக்கு ஏற்படாது. நமது டேவிட், கந்தலீலா பார்த்தானதும், கந்தனே கடவுள் என்றுகூறமாட்டார். அவருக்கும் கடவுள்வேறு, மதம்வேறு. எனவே முஸ்லீமோ கிருஸ்தவரோ, இப்புராண நாடகங்களைக் கண்டால் அவ்வளவுகேடு இல்லை, நம்மவர்கள்நிலை அப்படியல்ல. புராணங்களிலே வரும் கடவுள்கள் எல்லாம் தங்கள் கடவுள்கள் என்றல்லவா கருதிக்கொண்டு, அந்த நாடகங்களைப் பார்க்கின்றனர். இதனால், அவர்கள் மனந்தானேபாழாகிறது. ஆகவேதான் இப்புராணநாடகம் சமூக அபிவிருத்திக்குக் கேடுசெய்கிறது என்றுகூறுகிறோம். சிலப்பதிகாரத்தின் சுவையை உணர, அந்தநூல் தோன்றிய காலமாகிய 2000ஆண்டுகளுக்கு முன்பிருந்த கண்ணையும் மனதையும், கொண்டு பார்க்கவேண்டும் என்று சர். சண்முகம்கூறினார். அத்தகைய கண்ணையும் மனதையும் பெறநான் அசக்தனாக இருக்கிறேன். இனி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பிறகு உலகம் எப்படி இருக்கும் என்ற சிந்தனையும், கண்ணும் கொள்ளவேண்டுமென்றால் எனக்கு விருப்பமிருக்குமேயொழிய, 2000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் பற்றிய அக்கரை இராது. அந்தக் கண்ணையும் மனதையும் கொண்டு பார்த்துச் சிலப்பதிகாரமுறைப்படி, இக்காலத்திலே, கண்ணகியைவிட்டு மாதவிமனைக்குச் சென்றால், கண்ணகி கோவலனைச் சும்மாவிட்டாலும், மாதவியைச் சும்மாவிடமாட்டாள். பழங்காலக் கதையின் கருத்துகள் பல இன்று ஏற்றவையாகா என்பதை எடுத்துக்காட்டவேஇதனைக்கூறுகிறேன். இந்த நிலைக்குத் தமிழ்நாட்டிலே இன்று ஆயிரக்கணக்கான வாலிபர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைச் சர். சண்முகம் அவர்கட்குக்கூற விரும்புகிறேன் சீர்திருத்த விஷயமாக நான்கொண்டுள்ள அபிப்பிராயம், சர். சண்முகம் அவர்கள் முன்னாளில்செய்த சொற்பொழிவைக்கேட்டதால் ஏற்பட்டவையேஎன்பதையும்தெரிவித்துக்கொள்ளுகிறேன்.பொதுவாகவே கலை விஷயமாகநாங்கள் கொண்டுள்ள கருத்துஇதுதான், கலை மக்கள் உள்ளத்திற்குக்களிப்பூட்டும் கருவியாக இருப்பின், அதனிடம் எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால், கலை ஒரு இனம் மற்றோர் இனத்தை அடக்கியாள உபயோகமாகும் வலையாக இருக்கிறது, எனவே அந்தவலையின் பின்னால் எத்தனைபெரிய சக்தி இருந்தாலும், ஒன்று வலையைச் சின்னாபின்னப்படுத்துவது, அல்லது அந்த முயற்சியிலே, நாங்கள் சின்னாபின்னமானாலும் கவலையில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம், இதற்காகத் தங்களை அர்ப்பணம்செய்ய ஆயிரக்கணக்கான வாலிபர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள், என்பதைத் தலைவருக்குத் தெரிவிக்கிறேன். எலும்புபெண்ணுருவான அருட்கதைகளைப்பற்றிப்பாடியும் ஆடியும் வந்ததுபோதும், நமதுபெண்மக்கள் எலும்புருவானது தவிர பலனேதுமில்லை. இனிப்பெண்கள் எலும்புருவாகும் பரிதாப

(B-பக்கம் பார்க்க.)

## சர். சண்முகம் சொற்பொழிவு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடகத்தொழிலாளரின் நலன்களைக் கவனிக்கவேண்டும். சீர்திருத்த நாடகங்கள் நடத்தப்படவேண்டும். நண்பர் அண்ணாத்துரை சந்திரோதயம் என்றநாடகம் எழுதி நடத்திக்கொண்டு வருகிறார். அதைப்போல, ஒன்று போதுமா? நூற்றுக்கணக்காக எழுதிடவேண்டும். நமது நடிகர்கள் அவைகளை நடத்துவார்கள். அவர்கள் யாரும், நடிக்க முன்வராவிட்டால், நண்பர் அண்ணாத்துரை எழுதும் நாடகத்தில் நான்நடிக்கிறேன். எனக்கு நாடகமாடிப் பழக்கமிருக்கிறதோ இல்லையோ என்று சந்தேகம் வேண்டாம். சம்பந்தமுதலியாரைக் கேட்டுப்பாருங்கள். நான் காலேஜில் படிக்கும்போது, அவர் தலைமைவகித்திருந்த சுகுணவிலாச சபையில்நான்நடித்திருக்கிறேன்.

இந்த மகாநாட்டை இவ்வளவு நன்றாக நடத்திய நண்பர்களுக்கு என் நன்றியறிதலைக்கூறிக் கொண்டு, என்முடிவுரையை நிறுத்திக்கொள்கிறேன்.

—

## பட்டூர் பாடமும்.

6ம் பக்கத் தொடர்ச்சி.

"பாகிஸ்தானா! பாரதமாதாவைவெட்டுவதுபோன்றதல்லவா அச்செயல்" என்று பதறிய, ஆச்சாரியார், சென்றகிழமை பேல்காம் எனும் நகரிலே பேசுகையில், "பாகிஸ்தான் என்றால்பீதிஎனக்குஇல்லை. இந்தியா, பற்றுப்பிரிவுகளாக்கப்பட்டும்,பரிபாலனபீடம் பந்நாக இருப்பினும், அதனால் ஒரு ஆபத்தும் இல்லை. சோவியத்திலே இச்சுதந்திரம் வழங்கப்பட்டு விட்டது" என்று கூறினார். இதுபோல, முதலிலே மிரட்சி அடைந்தவரும், இப்புரட்சி கூடாது என்று கூறினோரும், இன்று, வர்க்கத்திற்கோர் வட்டாரம் என்றமறுக்க முடியா உண்மையை உணரத்தொடங்கிவிட்டார்கள். அவர்களுங்கூடப் பல நாட்கள், பூகோளவகுப்பு நடத்திப்பார்த்தவர்கள் தான்!!

## தி மெட்ராஸ் ஓரியண்டல் அஸோசியேஷன்.

6—2—44 காலை 10-30க்கு ஆதியப்ப நாயக்கன்தெரு 74-ம்நம்பர் இல்லத்தில் "சினிமாக்கொடி" ஆசிரியர் திரு. பத்மன் செல்லப்பன் அவர்கள் தலைமையில் வாலிபர்கூட்டம் ஒன்றுகூடியது. "ஒற்றுமைவளர்த்தல், ஆரோக்கிய வளர்ச்சி-கலைவளர்ச்சிக்கானவை செய்தல்" முதலியநோக்கங்கள்கொண்ட மேற்படி அஸோசியேஷன் மேற்கண்ட கட்டிடத்தில் திறவப்பட்டிருக்கிறது. இதற்கு N. S.கிருஷ்ணன் தலைவராகவும், M. சுந்தர், P. V. துரைராஜ் காரியதரிசிகளாகவும் சாமி D. பரமானந்தம் பொக்கிஷதாராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## கலையின் நிலைகுறித்து அண்ணாத்துரை பேச்சு

(A பக்கத் தொடர்ச்சி)

வாழ்வைச் சித்தரிக்கும் நாடகங்களை நடத்துங்கள். கண்ணைப் பெயர்த்தெடுத்து அப்பிய கண்ணப்பர் கதையை ஆடியதுபோதும், இனிக்கோயில் கட்டிக்கும்பாபிஷேகம் செய்பவன், ஊரிலே கொள்ளையடிக்கும் விஷயத்தை விளக்கும் நாடகத்தை நடத்திக்காட்டுங்கள். வாழ்க்கையைச்சித்தரித்துக் காட்டுங்கள். ஏழையின் கண்ணீர், விதவையின்துயரம், மதத்தரகரின் மமதை ஆகியவற்றை விளக்கும் அறிவுவளர்ச்சி நாடகங்களை நடத்துங்கள்.

சர். சண்முகம் அவர்கள் காலையிலே கூறியசில கருத்துகளை மறுத்து நான்பேசுவதால், நான் அவரைத்தாக்கிப் பேசுகிறேன் என்றுநீங்கள் யாரும்எண்ணிவிடவேண்டாம் என்று உங்களைக்கேட்டுக்கொள்கிறேன். அவர் அப்படிக்கருதமாட்டார்ஆகையால், அவரைக்கேட்டுக் கொள்ளவில்லை.

நாடகக்காரருக்கு, நாட்டுமக்களிடையே ஏற்படும் பலதிறப்பட்ட மாறுபாடான கருத்துகளால் தொல்லை பலஉண்டாவது எனக்குத் தெரியும். சில நாடகங்களிலே, கதாநாயகன் வேடதாரி காங்கிரஸ் அபிமானியாகவும், ஆர்மோனியக்காரர் ஜஸ்டிஸ்காரராகவும், கதாநாயகி சுயமரியாதை உணர்ச்சி கொண்டவராகவும் இருப்பதுண்டு. அந்த நாடகங்களிலே சச்சரவு சகஜம். சிலஊர்களிலே, காங்கிரஸ்பாட்டுப்பாடச் சொல்வார்கள், சில இடங்களிலே சுயமரியாதைப் பாடல்களைப் பாடச்சொல்வார்கள். இத்தகைய தொல்லை, பெரிய கம்பெனிகளுக்கு ஏற்படுவதில்லை. காட்சிமேல் காட்சி விதவிதமாக மளமளவென்று வந்துகொண்டே இருப்பதால், பொதுமக்களுக்கு, இந்தத்தொல்லை கொடுக்கநேரம்இருப்பதில்லை. இந்தப்பாதுகாப்பினாலேயே, பெரிய கம்பெனிகள் இத்தகைய தொல்லையைப் பெறுவதில்லை. பெரும்பாலான நாடகக்காரருக்குநான்சொன்ன தொல்லை ஏற்படுவதுண்டு. நாட்டுமக்களின் மனப்போக்குஎப்படிமாறுகிறதுஎன்பதை நடிகத்தோழர்கள்உணர்ந்தால்தான்,இவ்விதத்தொல்லைகளின்றித் தொழில்நடத்த முடியும். பொதுமக்களும், இனி,நாடு சீர்திருத்தநாடகங்களையே காணவிரும்புகிறது என்பதை நாடகக்காரர்கள் உணரும்படி செய்யவேண்டும், செய்ய ஆரம்பிப்பார்கள் என்று நம்புகிறேன். விரைவிலே, எங்கும் சீர்திருத்த நாடகங்கள் நடத்தும் ஆர்வம் வளர்ந்து, அதன்மூலம் நாடகக்கலையும் வளரும் என்று நம்புகிறேன். சீர்திருத்தக்கருத்துகளைப் புராணநாட கங்களில் கூடச்சிலர் புகுத்திக்காட்டுகிறார்கள், தமக்கிருக்கும் சீர்திருத்த ஆர்வத்தினால். இந்தத்துறையிலே, நமதுநண்பர் N.S. கிருஷ்ணன் அவர்கள் திறமையாகவேலை செய்து வருகிறார். ஒரு படத்தில்-மாணிக்கவாசகர்-என்று நினைக்கிறேன், அவர்ஒரு கணக்கப்பிள்ளையாக நடிக்கிறார். கையிலேவைத்துக்கொண்டிருக்கும் பேனாவைக்காட்டி ஒருவரிடம் கூறுகிறார், "ஏய்! கையிலே இருப்பது என்ன தெரியுமா? பேனா! தர்ப்பையில்லை!! என்று கூறுகிறார். எவ்வளவு ஆழ்ந்த கருத்துப்பாருங்கள். காலாவாணர்கள்கூடிய இந்த மன்றத்திலே பேச, எனக்கோர்சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி என்மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்தமகாநாட்டுநிர்வாகிகளுக்கு என்வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

---

## சீர்திருத்த நாடகத்திற்கு பேராதரவு

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிறகு, தோழர்கள் C. N. அண்ணாத்துரை, மீனாட்சிசுந்தர முதலியார், K. A P. விசுவநாதன், A. பொன்னம்பலனார், திருப்பூர், S. R, சுப்பிரமணியம், தண்டபாணிப்பிள்ளை, மணி, ஆகியோர் பேசினர்.

திரு. M. K. தியாகராஜபாகவதருக்கு "இசைநாடகஒளி" என்றும், திரு,P. சம்பந்த முதலியார் அவர்கட்கு "நாடகப் பேராசிரியர்" என்றும், திரு. M. N. N. பாவலருக்கு நாடகமணி என்ற பட்டமும் வழங்கப்பட்டன. தலைவரின் முடிவுரைக்குப்பிறகு, தோழர், T.N.சிவதானு அவர்களும், கருப்பையாவும் வந்தனோபசாரம்கூறியபின்னர் மாநாடுமுடிந்தது.

குறிப்பு:—நாடகக்கலை மாநாடு நடைபெறுவதற்குப் பலநாட்களுக்குமுன்பாகவே, தீர்மானங்கள் அனுப்பும்படி மாநாட்டினர் கேட்டுக்கொண்டிருந்தனர். பல தீர்மானங்கள் அனுப்பப்பட்டன. T. K.சகோதரர்களின் M. S. B. S. சபையினர், பல தீர்மானங்கள் அச்சிட்டதாளையும் தயாரித்தனர். அதுபோலவே, ஈரோடு முத்தமிழ் நுகருவோர் கழகமும், பல தீர்மானங்களை மாநாட்டுக்கு அனுப்பியிருந்ததுடன், மக்களுக்கும் வழங்கினர், பத்திரிகைகளிலும் வெளியிட்டிருந்தனர். தோழர் M. சிக்கையா அவர்களும்சிலதீர்மானங்களை, மாநாட்டிற்கு அனுப்பிவைத்தார். மாநாட்டிலோ ஒருதீர்மானமும் இல்லை! தீர்மானத்தைப்பற்றிய பேச்சே இல்லை! தமிழ்நாட்டிலே, முதன்முறையாகக்கூடிய நாடகக்கலை மாநாட்டிலே தகுதிமிக்கதலைவர் சர், சண்முகம் தலைமையிலே, நடந்த ஒரு மாநாட்டிலே தீர்மானங்கள் பலவந்திருந்தும், அதுபற்றிய பேச்சுமூச்சுமின்றிக் கூடிப்பேசிக்கலைந்த காரணம் என்னவென்று, மக்கள் பேசிக்கொள்ளலாயினர். தீர்மானமில்லாமாநாடு, உலகிலேயேஇதுதான் முதலாவது!! என்று பேசினர்.

இரவு:—அன்றிரவு, M. S. B S. சபையாரின் "ஔவையார் நாடகம், மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கெனப்பிரத்யேகமாக நடத்தப்பட்டது. தோழர் T. K. சண்முகம் அவர்களுக்கு "ஔவை" என்றபட்டம் அளிக்கப்பட்டது.

பரிசுகள்:—திருப்பூர்த்தோழர் S R. சுப்பிரமணியம், தோழர்கள், நாராயணபிள்ளை நாராயணசாமி, சிவதானு ஆகியமூவரின் நடிப்புத்திறனைப் பாராட்டி ஒவ்வொருவருக்கும் 25 ரூபாய் பரிசு வழங்கினர்.

## தமிழ்த் திருமணம்.

காஞ்சிபுரம் ஜவுளிவியாபாரம் தோழர் K. S. பாலசுந்தரமுதலியார் திருக்குமாரி பத்மாவதி அம்மையாருக்கும், தோழர் தர்மலிங்க முதலியார் திருக்குமாரர் கன்னிவேல் அவர்கட்கும், 7—2—44 காலை, செங்கற்பட்டுஜில்லா போர்டு தலைவர் தோழர் T. சண்முகம் அவர்கள்தலைமையில் சீர்திருத்த திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்தைப்பாராட்டி தோழர் A. K. தங்கவேலர், அரசமணி, அழகத்தடிகள், சின்னையா, அண்ணாத்துரை ஆகியோர் பேசினர். இரவு, தோழர் M. K. தியாகராஜபாகவதரின் தம்பி, தோழர் M. L. கோவிந்தராஜபாகவதரின் இன்னிசை நடைபெற்றது. "குடி அரசுக்கு ஐந்து ரூபாயும், திராவிடநாடு" பத்திரிகைக்குஐந்துரூபாயும் நன்கொடை தரப்பட்டது.

## சீர்திருத்தத் திருமணம்.

சங்நாசி நல்லூர் இளந்தமிழர் இயக்கத்தின் சார்பாக சுபானு ஆண்டுதை மாதம் திங்களன்று [7—2—44] நண்பகல் திருச்சி வழக்கறிஞர் தோழர், சந்திரசேகர உடையார் அவர்கள் தலைமையில் மால்வாய் போர்டு ஸ்கூல் தலைமை ஆசிரியர் தோழர் சந்திரபிரகாசம் அவர்களின் இரண்டாவது செல்வி கனகரத்தினம் என்னும் நங்கைக்கும், சங்நாசிநல்லூர், தோழர் அ. இராமலிங்கம் என்னும் நம்பிக்கும் வா. தா. மால்வாய் மணமகள் இல்லத்தில் சீர்திருத்தமுறையில் திருமணம்நிகழ்ந்ததுதோழர்கள்பலர்வாழ்த்துக் கூறியபின், தி. கோ. குழந்தைவேலன், தோழர் வேலாயுத உடையார், சண்முகசுந்தரம், தனராசன். ஆறுமுகம் முதலியவர்கள் சீர்திருத்தம்புரோகித ஒழிப்பு, புராணமறுப்பு முதலியன பற்றி விரிவாகப் பேசினார்கள். மணமக்களால் சங்நாசி நல்லூர் இளந்தமிழர் இயக்கத்திற்கு நன்கொடையாக ரூபா 1ம், திராவிடநாடு தாளுக்கு ரூபா 1ம், குடியரசுக்கு ரூபா 1ம் நல்கப்பட்டது.

## திருமணம்.

செம்பியம்கூட்டுறவு, இன்ஸ்பெக்டரும், காலம்சென்ற டெபுடி ரிஸ்டிரார் சி. டி. சாமுவேல்பிள்ளையவர்களின் தனயருமாகிய தோழர் ஐசக் செல்வராஜ் அவர்களுக்கும், மதுரை ஆபரணப்பிள்ளை குமாரத்தி தோழியர் மோசிபத்மாவதி அம்மையாருக்கும் மதராஸ் வேப்பெரி பரிபாலனஉயர்தரப்பள்ளிக்கூடத்தில்திருமணமும், அதற்குப்பிறகு வரவேற்பும் நடைபெற்றது. தோழர் டெவிட் செல்லப்பா (பாஸஸ் கல்லூரிபிரின்ஸிபால்) வாழ்த்துரைகள் நிகழ்த்தினர். இரவு விருந்துநடந்தவுடன் மணம் இனிது முடிந்தது. திருமணத்தை முன்னிட்டு திராவிடநாடு பத்திரிகைக்கு ரூபா 2, நன்கொடை அளிக்கப்பட்டது.

# திராவிட நாடு

காஞ்சி 20—2—44 ஞாயிறு


## படமும் பாடமும்!

சில்நாட்களாக நமது சர்க்கார், நாட்டு மக்களுக்குப் பூகோளப்பாடவகுப்பு நடத்துவதிலே, மிக்கஅக்கறைகாட்டிவருகின்றனர், தக்ககாரணத்தோடு! "இந்தியா, ஒரேநாடு, ஒரு அமைப்பு. இதோ பாருங்கள் பூகோள அமைப்பை" என்றுகூறிப் படத்தைக் காட்டுகிறார்கள். படத்தின் மூலம் இவர்கள் நடத்தும் பாடபோதனைக்குக் காரணம், இன்று அனுபவம் புகட்டிய பாடத்தால், புத்தறிவு பிறந்து, பாகிஸ்தான் என்றும் திராவிடநாடு என்றும், கிளர்ச்சிகள் நடந்துவருகின்றனவே, அவைகளை அடக்கவேண்டுமென்ற நோக்கமன்றி வேறில்லை. மனித உடலுறுப்பு அமைப்புகளைவிளக்கப், பள்ளிகளிலே, எலும்பு உருவை எதிரே நிறுத்திப் பெரியகோல் கொண்டு, ஒவ்வோர்உறுப்பையும்சுட்டிக்காட்டி ஆசிரியர்கள், மாணவர்களுக்குப் பாடம் போதிப்பதுபோல, இந்தியா எனும் பூகோளப்படத்தைச் சுட்டிக்காட்டிப், படத்தைப்பாரீர்! பாடம் கேளீர்!! என்று சர்க்கார்கூறி வருகின்றனர். இந்த ஆசிரியத்தொழிலை, ஏகாதிபத்தியம், மிகக்குறுகிய காலத்திலே அதிகதிறமையுடன் நடத்தப் பழகிக்கொண்டது, பாராட்டுதலுக்குரியது என்போம்!

பாண்டத்தை உடைப்பதும், சுவரை இடித்துப் பெயர்த்தெடுப்பதும், உள்ளதைக்கெடுத்து, ஒரு பலனுமின்றிச்செய்வதாகவே இருக்கும். ஆனால் கனியை நறுக்கித்துண்டுகளாக்கித் தருவது, கனியின் சுவையைப் பலருக்கும் அளிக்கும் நற்காரியமாகவே இருக்கும். சிலபொருள் உள்ளது உள்ளபடியே இருப்பின் மட்டுமே பயனுண்டு. சில பொருளை, வேறு உருவாக மாற்றினாலோ முதல் உருவைத் திருத்தினாலோ மட்டுமே பயனுண்டு. வேறுசிலபொருள்களை எவ்விதமானாலும் உபயோகிக்கலாம். கனியை உள்ளவடிவிலேயும் சுவைக்கலாம், துண்டுகளாக்கியும் பயன்பெறலாம். ஆனால், பலாப்பழத்தை, மேற்தோல் போக்கிப் பசைக்குழம்பைநீக்கி, உட்தோலைஎடுத்துவிட்டு, வித்துகளை வேறாக்கிவிட்டுத்தான் தின்னமுடியும்! "இதோபழம் சுவையுள்ளது தின்பீராக' என்றுகூறிடின், மேலே கூறிய முறையின்றி, அப்படியே தின்ன முயன்றால் என்னாகும்! அது போலத்தான், நாட்டு நிலையும்; நாட்டினால் உண்டாகும் பயனுங்கூட. பிரிட்டிஷாரின் பூகோளப்பாடத்தை மறுக்காது ஏற்றுக்கொள்வோம், வாதத்திற்காக "இந்தியா, ஒரே தேசம்" என்ற பாடத்தையே, அந்

(6ம்பக்கம் பார்க்க.)

## சர். சண்முகம் சொற் பொழிவு!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியும். அறிவு ஒன்றுமட்டுமே போதும்என்றிருக்கமுடியாது, உள்ளத்திலே வேறுஉணர்ச்சிகளும் வேண்டிஇருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்திலே அரங்கேற்று காதையிலே, நாடகமேடையின் அமைப்புக்கூடச் சரியாகக் கூறப்பட்டிருக்கிறது. இத்தனை கோல் நீளத்தில் இத்தனைகோல் அகலத்தில் இவ்வளவுஉயரமுள்ளதாக நடனமேடை இருக்கவேண்டுமென்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. கோல் என்றால் என்ன, என்று நான் மலையாள நாட்டினரைக் கேட்டேன். அவர்கள் அந்த அளவைக்கூறினார்கள். இன்னும் அவர்களின் நிலஅளவு முறையிலே கோல் கணக்கேதான் இருக்கிறது. பழைய காலத்திலேயே, நாடகக்கலை இங்கு இருந்திருக்கிறது. நாட்டியத்தை நாம் இன்று பரதநாட்டியம் என்றுகூறுகிறோம். நாட்டியக்கலையே பரதன் என்பவர் எழுதிய நூலை ஆதாரமாகக்கொண்டது என்று சிலர்கூறுகின்றனர். பிறகுநான் யோசித்தேன், தமிழ் நாட்டிலே நாட்டியத்துக்குப் பரதநாட்டியம் என்றுபெயர் வருவானேன், தமிழருக்கு என்று நடனநூல் இருந்ததில்லையா, என்று யோசித்தேன். பரதம் என்ற சொல் எப்போதுவந்தது என்றுஆராய்ந்தேன். சுமார் இருபத்து ஐந்து வருடங்களாகத்தான் இந்தப் பரதநாட்டியம் என்ற சொல்வழங்குகிறது. சென்னையிலே மியூசிக் அகாடமி போன்றவைகள் தோன்றியபிறகே, பரத நாட்டியம் என்ற பெயர் உபயோகிக்கப்பட்டது. முன்பெல்லாம், அதனைச் சதிர்க்கச்சேரி என்றே சொல்லிவந்தார்கள். பரதம் எழுதப்பட்டுச் சுமார் ஆயிரம்வருடமிருக்கும், சிலப்பதிகாரமோ 2000 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டது. எனவே பரதநாட்டிய நூல்தோன்றுவதற்கு முன்பே தமிழ்நாட்டிலே நாட்டியக்கலை விருத்தியாகி இருந்தது. பழங்காலத்திலிருந்து வளர்ந்து வரும், இந்நாடகக்கலையை அபிவிருத்தி அடையச்செய்யவே இன்று இந்த மகாநாடு நடைபெறுகிறது. இதிலே பலர் நாடகக்கலை பற்றிப்பேசுவார்கள். இந்த மகாநாட்டுக்குத் தலைமைவகிக்கும்படி என்னைக்கேட்டுக்கொண்ட, மகாநாட்டு நிர்வாகிகளுக்கு என் வந்தனத்தை அளிக்கிறேன்.

### தலைவர் முடிவுரை.

நான் இந்த மகாநாட்டுக்கு காலையிலே வந்ததும், சிலபேர் என்னிடம் வந்திருந்து, இந்த மகாநாட்டிலே ஏதோ கலகம்விளையப் போவதாகவும், மகாநாடு கலைக்கப்பட்டுவிடப் போவதாகவும் சொன்னார்கள். யார் இவ்விதம் செய்யப்போகிறார்கள், என்று நான்கேட்டேன், அவர்கள் சிலருடைய பெயரைக் குறிப்பிட்டனர். உடனேநான், அப்படி எல்லாம் அவர்கள் நடக்கமாட்டார்கள் என்றுகூறினேன். மகாநாடு, அமைதியாக நடைபெற்றது, பல அரிய சொற்பொழிவுகள் நடைபெற்றன. நாடகக்கலை அபிவிருத்திபற்றிப் பலர் பேசினார்கள். நாடகத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்லசம்பளம்தரப்படவேண்டும் என்பதுபற்றிப் பேசப்பட்டது. அதுஅவசியமான காரியந்தான். நாடகக்காரர் என்றால், முன்பெல்லாம் மதிப்பு இருந்ததில்லை, அது இப்போது மாறிவிட்டது. நடிகர்கள் பொதுத்தொண்டு செய்பவர்கள் என்ற எண்ணம் வளர்ந்திருக்கிறது. இதுமிகநல்லது. பட்டங்கள் வழங்கும் அதிகாரத்தைச் சர்க்கார் எனக்கு அளித்தால், நான், சர், திவான்பகதூர் போன்ற பட்டங்களை, நமது நடிகர்களுக்கு அளிப்பேன். மேனாடுகளிலே சிறந்த நடிகர்களின் சேவை பாராட்டப்பட்டு, அவர்களுக்கு உயர்ந்த பட்டங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

நண்பர் அண்ணாத்துரைக்கும் எனக்கும் ஒரு அபிப்பிராயபேதமும் இல்லை. மூடப்பழக்கவழக்கங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்று முன்பு சொல்லிக்கொண்டிருந்தவன்தான் நான். சீர்திருத்தம் வேண்டும் என்பதிலே இப்போதும், எனக்கும் நண்பர் அண்ணாத்துரைக்கும் அபிப்பிராய பேதம் ஒன்றும் கிடையாது. அதை அவரே எடுத்துக்கூறினார். நாடகங்களிலே, புராணங்களே கதைகளாக இன்று அமைந்துள்ளன. இது மாறவேண்டியதுதான். வாழ்க்கையைச் சித்தரிக்கும் புதிய, சீர்திருத்தநாடகங்கள் நடத்தப்படவேண்டும். ஷேக்ஸ்பியர் அருமையான நாடகங்கள் எழுதியிருக்கிறார். என்றபோதிலும், இப்போது இலண்டன் நாடகக் கொட்டகைகளிலே, அந்த நாடகங்களையே நடத்திக்கொண்டு இருக்கிறார்களா? புதிய-இப்போது எழுதப்பட்ட நாடகங்கள் பலவற்றை அங்கு நடத்துகிறார்கள், நமது சம்பந்தமுதலியார் அவர்கள் பல புதிய நாடகங்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். எத்தனை நாடகக் கம்பெனிகள் அந்த நாடகங்களைப் பயன்படுத்திக்கொண்டன? வெறும் புராணமயமாக நாடகங்கள் இருந்து பயனில்லை. இது விஷயமாக நண்பர்கள் கூறியது மிகச்சரியானதேயாகும். சீர்திருத்தக்கொள்கை விஷயமாக, தான் பேசியது, நான் முன்பு செய்துவந்த பிரசாரத்தினால்தான் என்று, நண்பர் அண்ணாத்துரை கூறினார். அது உண்மை. நண்பர் அண்ணாத்துரை கொஞ்சம் குருவுக்குமிஞ்சிய சீடராகிவிட்டார். ஆனால், அப்படிப்பட்ட சீடர் இல்லாவிட்டால் குருவும் பிற்போக்காகிவிடக்கூடும். நாடு முன்னேற வேண்டுமென்றால் இத்தகைய சீடர்கள்தான் அவசியம் வேண்டும். நாடகக்கலை மகாநாட்டிலே, இவ்வளவு சமுதாய சீர்திருத்த விஷயம் பேசப்படுவானேன் என்று சந்தேகம் உண்டாகலாம். இது சகஜம். இந்த மகாநாட்டிலே சமூக சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசவேண்டியது அவசியம். வாழ்க்கையைச் சித்தரிக்கவேண்டியதுதானே நாடகத்தின் கருத்து. ஆகவே, சமூகத்திலே, புதியபுதிய கருத்துகள் தோன்றும்போது, பயழகருத்தைக்கொண்ட நாடகங்களே நடத்தப்பட்டுவந்தால். பார்ப்பவருக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. கருத்துமாறுவதுபோல, நாடகங்களும் புதிதுபுதிதாக மாறவேண்டும். வாழ்க்கையை விளக்கும் நாடகங்கள் ஆயிரக்கணக்கிலே வெளியிட இடமிருக்கிறது. தரித்திரம் இருக்கும் வரையிலே கலைகூடத் தேவையில்லை என்றுநான் கூறுவேன். ஆகவே

(A பக்கம் பார்க்க.)

## சர். சண்முகம் சொற்பொழிவு!

(முன்னுரையும், முடிவுரையும்)

### புராணங்களைக் கொளுத்தினால், மூடப்பழக்கவழக்கம் ஒழியுமா?

### புராணங்களிலும் கலையழகுள்ள பகுதிகள் உள்ளன!

### சிலப்பதிகாரச் சுவைஉரையை அக்காலக் கண்கொண்டு நோக்கவேண்டும்!

நண்பர்களே! நகரசபைத்தலைவர் அவர்களே, அங்கத்தினர்களே!

நாடகக்கலை அபிவிருத்தி மகாநாட்டுக்குத் தலைமைவகிக்கவந்த எனக்கு, ஈரோடுநகரசபையின் சார்பாக ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்ததை நான் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டேன். காரணம், இது என்னைக் கௌரவப்படுத்துவது என்பதற்காக அல்ல. நாடகக்கலை அபிவிருத்தியிலே நகரசபைகள் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டியது மிகப் பொருத்தமானதாகும். நாடகக்கலை மாநாட்டுத் தலைவரைப் பாராட்டுவது, மிகவும் பொருத்தம் என்று கூறுவேன். நமது நாட்டிலே நாடகக்காரர்களைக் கூத்தாடிகள் என்று கேலியாகப்பேசுகிறார்கள். மேனாடுகளிலே, அவர்களைப் பாராட்டுகிறார்கள். நகரசபைகள், நாடகக்கலைக்காக உதவிசெய்கின்றன. மேனாடுகளிலே காணப்படும் பெரிய தியேட்டர்கள் நகரசபைகளுக்குச் சொந்தமானவைகளே. பாரிஸ்பட்டினத்தில் உள்ள பெரிய அருமையான நாடகக்கொட்டகை, அந்த ஊர் நகரசபையின் சொந்தக்கட்டிடம். அதுபோலவே, மேனாடுகளிலே மற்ற இடங்களிலும், விலைஉயர்ந்த நாடகக் கொட்டகைகள், நாட்டிய சாலைகள் எல்லாம், நகரசபைகளுக்குச் சொந்தம். இனிஇங்கும், நகரசபைகள், நாடகக்கலைக்கு ஆதரவுதருமென்று நம்புகிறேன்.

நாடகக்கலை என்பது நமது தமிழ்நாட்டிலே பழமையானது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் இருந்தது. ஆனால், இன்று சிலர், நாடகம் என்ற சொல்கூடத் தமிழல்ல, சமஸ்கிருதம் என்று கருதுகிறார்கள், சமஸ்கிருதம், என்றாலே, செம்மைப்படுத்தப்பட்டமொழி என்றுதான் பொருள். ஆரியர்கள் இங்குவரும்போது. சமஸ்கிருதத்தை வளமான ஒருபாஷையாகக் கொண்டுவரவில்லை. இங்குவந்து, தமிழ்மொழியிடமும், தமிழ்க்கலையிடமும் பலகருத்துகளைப்பெற்றுத் தங்கள் மொழியை வளர்த்துக்கொண்டனர். அப்படிச் செம்மைப்படுத்தப்பட்ட மொழியே சமஸ்கிருதம் என்பது. சிலர், எதைப்பார்த்தாலும், இது சமஸ்கிருதத்திலிருந்துவந்தது, இது ஆரியக்கலை, என்றுகூறித், தமிழருக்கு இழிவுதேடுகிறார்கள். நாடகம் என்ற சொல், நடைஎன்ற தமிழ்ச்சொல்லின் கருத்தைக்கொண்டது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்திலே நாடகக்கலை இருக்கிறது. பழங்காலத்திலே, நாடகங்களை மூன்றுவகையாகப் பிரித்திருந்தனர். ஒன்று பக்திரசமான புராணக்கதைகள், இவைகளைக் கோயில்களிலே நடத்திவந்தார்கள். மற்றொன்று வீரர்கதை, இது அரசர்கள் முன்னிலையில் மாளிகைகளிலே நடிக்கப்பட்டன. மூன்றாவது அறிவுவளர்ச்சிக் கதைகள். இவைகளை மக்கள் முன்பு நடத்திவந்தார்கள். இப்போதோ, நாடகங்கள் யாவும் வெறும் புராணக்கதைகளாக உள்ளன. நாரதர் வந்துவந்து போகாதநாடகமே காணோம். அவைகளைப் பார்க்கும்போது கஷ்டமாகத்தான் இருக்கிறது. புதிய கருத்துள்ள, சீர்திருத்த நாடகங்கள் நடத்தவேண்டும். புராணங்களிலே புளுகுகள் உள்ளன. இராமாயணம், பெரியபுராணம், பாரதம் போன்றவைகள், புராணப் புளுகுகள் என்பதிலே சந்தேகமில்லை. இதைவிட அதிகமான புளுகுகள் இலியட்டிலும், ஒடிசியிலும், உள்ளன. நான் மக்களிடையேஉள்ள மூடப்பழக்கவழக்கங்கள் போகவேண்டும் என்று முன்பெல்லாம் பேசிவந்தவன்தான். இப்போதும், எனக்கு அதுதான் கருத்து. ஆனால் இந்தப் புராணங்களிலே, கலையழகும் இருக்கிறது. சிலர், இப்புராணங்களைக் கொளுத்திவிடவேண்டுமென்று கூறுகிறார்கள். இவைகளைக் கொளுத்திவிட்டால், மக்களிடம் உள்ள மூடப்பழக்கவழக்கங்கள் போய்விடுமா! போய்விடுவதானால், விறகு பஞ்சமுள்ள இந்த நாட்களிலே, அவைகளைக் கொளுத்திக்கூட விடலாம். மக்களிடையே. இந்த மூடப்பழக்கவழக்கங்கள் ஒழியும்படியான அறிவை உண்டாக்கவேண்டும். படைஎடுப்பின்போது ஒரு அரசன், படிப்பகம் ஒன்றைக் கொளுத்தினானாம். கொரானில் இருக்கும் உண்மைகளே உலகுக்குப் போதும், ஆகவே வேறுபுத்தகங்கள் வேண்டாம், படிப்பகம்தேவையில்லை. இந்தப்படிப்பகத்திலேஉள்ள புத்தகங்களிலேகாணப்படும் சகலஞானமும், கொரான் ஒன்றிலே உண்டு, ஆகவே வேறுநூல் தேவையில்லை. கொரானுக்கு மாறுபாடான கருத்துகள் இந்தப்புத்தகத்திலே இருக்குமானால் அவை, இருக்கக்கூடாது, என்று சொன்னானாம். அதைப்போலப், பழம்நூற்களைக்கொளுத்திவிட்டால், பிறகு நமக்கென என்ன நூல் இருக்கும். இந்த நூற்களைப் பற்றிக் கவனிக்கும்போது, அந்தக்காலத்துக் கருத்தைக்கவனிக்கவேண்டும். சிலப்பதிகாரத்தின் சுவையை உணரவேண்டுமானால், அது எழுதப்பட்ட காலமாகிய 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த கண்ணோடும் மனத்தோடும் பார்த்தால்தான் சுவை

(3-ம் பக்கம் பார்க்க.)

## சீர்திருத்த நாடகத்திற்குப் பேராதரவு!

### சர். சண்முகம் நடிக்க இசைகிறார்!

### ஆரியம் தலைநீட்டவில்லை!

### தீர்மானங்களே இல்லை!

11—2—44ல், ஈரோடு சென்ட்ரல் தியேட்டரில், சர். R. K. சண்முகம் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு நாடகக்கலை அபிவிருத்தி மகாநாடு, சிறப்புறச் சீர்திருத்தவாதிகள் உள்ளம் குளிரும் முறையிலே நடைபெற்றது. நாடகக்கலையினரும், பொதுமக்கள் பணிபுரிவோரும், ஆர்வமிக்க தோழர்களும், குழுமியிருந்தனர். M. S. B. S. சபையினரான T. K. சகோதரர்களின் உபசாரமும், நகைச்சுவை நடிகர் தோழர் சிவதாணுவின் உற்சாகமும், பாராட்டக்கூடியதாக இருந்தது. பூங்கொத்துகளாலான புதுத்திரைக்குப்பின்னால், அரசஅவைபோன்ற அமைப்பான மன்றத்திலே, தலைவர் சண்முகத்திற்கு, ஒருபுறம் ராவ்பகதூர் சம்பந்தமுதலியாரும், மற்றோர்புறம் திரு. M. K. தியாகராஜபாகவதரும் அமர்ந்தனர். நவாப் T. S. இராஜமாணிக்கம், நாடகாசிரியர் [illegible] P. பொன்[illegible]ச்சாமிப்பிள்ளை, மங்களபாலகான சபை நடிகர் தோழர் K. T. சந்தானம், நடிகமணி M. M. சிதம்பரநாதன், ஆகியோர் மன்றத்திலே, மணிகளெனத்திகழ்ந்தனர். நகைச்சுவை விருந்தை நந்தமிழருக்கு ஊட்டும் நண்பர், N. S. கிருஷ்ணன் அவர்கள், மாநாட்டினரின் மனதையும் கண்ணையும் கொள்ளைகொண்ட வண்ணம், வீற்றிருந்தார். பெரியார் ஈ. வெ. கிருஷ்ணசாமி, M. சிக்கையா, கான்சாகிப்ஷேக் தாவுது சாயபு அவர்கள், மீனாட்சிசுந்தரமுதலியார், திருப்பூர் பழனிச்சாமி கவுண்டரவர்கள், வக்கீல் அண்ணாமலைப்பிள்ளை, திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதன், அ. பொன்னம்பலனார், S. V. லிங்கம், C. N. அண்ணாத்துரை, திராவிடமணி ஆசிரியர் முத்து, அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் மயிலேறு, சினிமா நடிகையர் தோழியர் சிவபாக்கியம் அம்மையார், T. K. சகோதரர்கள், தண்டபாணிப்பிள்ளை, உடுமலை நாராயணக்கவி, மதுரைகருப்பையா, ஆகியோரும் மற்றும் பலரும் மாநாட்டிலே, முதலிலிருந்து கடைசிவரை இருந்தனர்.

மாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவரான ஈரோடு நகரசபைத்தலைவர் தோழர். R. K. வெங்கிடுசாமி அவர்களும், நகரசபை அங்கத்தினர்களும், மாநாட்டில் முக்கியபங்கெடுத்துக்கொண்டனர்.

மாநாட்டினரை, M. S. B. S. சபை நடிகச் சிறுவர் ஒருவரும், தோழியர் சிவபாக்கியம் அம்மையாரும், தமிழ்மொழிப்பெருமைபற்றிய இன்னிசை பாடி மகிழ்வித்தனர்.

நாடக மாநாடு ஆரம்பத்திலே, ராவ்பகதூர் சம்பந்தமுதலியார் அவர்கள் தமிழ்க்கொடி ஏற்றிவைத்தார்.

தோழர். M. K. தியாகராஜ பாகவதரவர்கள், திறப்புவிழாச் சொற்பொழிவாற்றினார்.

சர். சண்முகம் அவர்கட்கு, ந[illegible]பைத்தலைவ[illegible]ரு வரவேற்புரை வாசித்தளித்தார், வழக்கத்திற்குமாறாக, சர். சண்முகம் அவர்களை மாநாட்டுக்குத் தலைமைவகிக்கும்படி ஒருவரும் பிரேரேபிக்கவில்லை. நிகழ்ச்சிநிரலில் அதுகுறித்து இருந்ததும் கவனிக்கப்படவில்லை. வரவேற்புரை நிகழ்த்திய, தோழர் R. K, வெங்கிடுசாமி அவர்களும், தலைவர்பிரேரேபணையைச் செய்யவில்லை. மகாநாட்டின் போக்கு, ஆரியத்தை ஆதரிப்பதாக இருக்கும் என்று ஐயம் கொண்ட பொதுமக்களால், தலைவர் தேர்தல் நடத்தப்படும்போதே ஏதேனும் ஆட்சேபனைகள் கூறப்படுமோ, என்ற சந்தேகத்திலேயே, எந்த மாநாட்டிலும் கண்டறியாத கேட்டறியாத முறையிலே, தலைவர் தேர்தலே நடைபெறாமலேயே, தலைமைப்பேருரை நிகழலாயிற்று.

சர். சண்முகம், அவர்கள் தமது தலைமைப் பேருரையை ஆற்றினார். நாடகாசிரியர், சங்கரதாஸ் அவர்களின் திருஉருவப்படத்தைத் தோழர் M. N. N.பாவலர் திறந்துவைத்தார். சினிமாநடிகர் தோழர் M. K. ராதா அவர்களின் தகப்பனார் M. கந்தசாமி முதலியார் (நாடகாசிரியர்) அவர்களின் படத்தைத் தோழர் T. K. சண்முகம் திறந்துவைத்து, அவருடைய அருங்குணங்களைப் பாராட்டிப் பேசினார்.

இடைவேளை உணவுக்குப்பிறகு, மாலை 3-30 மணிக்கு மீண்டும் மகாநாடு கூடிற்று. "நாடகமும் அதன்பயனும்" என்பதுகுறித்து, நவாப் T. S. இராஜமாணிக்கம் அவர்களும், "நாடகத்தமிழ்" என்பதுபற்றித் தோழர்C. R. மயிலேறு அவர்களும், "நாடகத்தில் பெண்கள்" என்பது குறித்துத் தோழியர் P. S, சிவபாக்[illegible] அவர்களும், நகைச்சுவை அரசு தோழர், N. S. கிருஷ்ணன் அவர்கள் "நாடகமும் சி[illegible]ம்" எனும் பொருள் குறித்தும், "நடிகர் வாழ்க்கை" எனும் பொருள்பற்றித் தோழர் K. T. சந்தானம் அவர்களும், இராமபாலகானசபா மானேஜர் "இன்றைய நாடகம்" என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

(பி. பக்கம் பார்க்க.)

## கலையின் நிலைகுறித்து அண்ணாத்துரை பேச்சு!

### புராணங்களைக் கொளுத்துவது மூடத்தனத்தைக் கண்டிக்கும் குறியே!

### புராணங்களிலுள்ள கலையழகுப்பகுதிகளைத் தொகுப்பு நூலாகச்செய்க!

### இக்காலக்கண்ணகி, மாதவியைச் சும்மாவிடமாட்டாள்!

நாடகஅபிமானிகளும், நாடகக்கலையிலே ஈடுபட்டுள்ள தோழர்களும், இசைவாணர்களும் கலாரசிகர்களும் நிரம்பியுள்ள இந்த மகாநாட்டிலே, எனக்குப்பேச ஒருசந்தர்ப்பம் கிடைத்ததுபற்றிமிக்க மகிழ்ச்சிஅடைகிறேன். நாடகக்கலையின் முன்னேற்றத்திற்காக இந்த மாநாடுநடைபெறுகிறது. காலையிலே தலைவர் சர். சண்முகம் அவர்கள் சொற்பொழிவாற்றினார், வேறுபல அன்பர்களும் பேசினர். இயலைவளர்க்கவும் இசையைவளர்க்கவும் அமைப்புகள் இருக்கின்றன, நாடகக்கலை வளர்ச்சிக்கான அமைப்பும் முயற்சியும்இல்லை. எனவே, எனது நண்பர் தோழர் சிவதாணு, இதற்கான ஓர் தனிமாநாட்டை, முதன்முறையாகக்கூட்டியதுபற்றி நான் அவரைப்பாராட்டுகிறேன்.

நாடகக்கலை முன்னேற்றத்திற்குப் பல காரியங்கள் நடைபெறவேண்டிஇருக்கின்றன. முதலிலே, ஊருருக்குத்தியேட்டர் வசதிவேண்டும். இப்போது, எல்லாம் சினிமாக்கொட்டகைகளாகிவிட்டன. நாடகத்திற்கெனத் தனித்தியேட்டர்கள்இல்லை. திருச்சி நகரசபை ஒன்றில்மட்டுமேதனித்தியேட்டர் அமைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல, ஒவ்வொரு நகரசபையும் செய்ய முயற்சிஎடுத்துக்கொள்ளவேண்டும். சர்க்காரும், செல்வவான்களும், நாடகக்கலை அபிவிருத்திக்குஉதவிஅளிக்கவேண்டும். இவைகளுக்காகப் பொதுமக்கள் முயலவேண்டும்.

பொதுவாக, நாடகக்காரர் என்றால் முன்பெல்லாம் மதிப்புக்கிடையாது. கையாண்டி செய்வார்கள். பொதுமக்களுக்கும் நடிகர்களுக்கும் தொடர்பு இருப்பதில்லை. இப்போது, நடிகர்களிடம் நன்மதிப்பும் தொடர்பும் ஏற்பட்டிருக்கிறது. இந்தத்தொடர்பு நீடிக்கவேண்டும், இதனால் தக்கபயனும் ஏற்படவேண்டும்.

நாடகக்கலையின் மேன்மைபற்றியும், நடிகர்களின் சேவைபற்றியும் காலையிலே பலர் பேசினார்கள், உற்சாகத்தோடு. நான் ஒரு வாரத்திற்குமுன்பு, கிராமத்திலே நடைபெற்றநாடகம் காணச்சென்றேன். ஒரு நடிகத்தோழரைப் பாராட்டிப்பேசினேன், அவருடைய நடிப்பு எனக்குப்பிடித்ததால். என்பாராட்டுதலுக்கு அவர் பதில்கூறும்போது சொன்னார், "என்னமோ, நாங்கள் நடிகராக இருக்கிறோம், சத்தியமாகச்சொல்கிறேன், எங்கள் பிள்ளைகளை நாங்கள் நடிகராக்கப்போவதில்லை" என்று. ஏன், ஒருநடிகர் இவ்வாறு கூறவேண்டுமென்று நான்யோசித்தேன். அவருடைய வேதனையானவாழ்வு அவரை அப்படிக்கூறச்செய்தது என்பதை உணர்ந்தேன். பெரும்பாலான நடிகர்களின், நாடகத்தொழிலாளரின் வாழ்க்கை இப்படித்தான்இருக்கிறது. இவ்வளவு வேதனையுள்ளவாழ்விலே, நடிகர்கள் இருந்துகொண்டிருந்தால், நாடகக்கலை எங்ஙனம் முன்னேறும்? காலையிலேபேசிய என்நண்பர் N. S. கிருஷ்ணன் அவர்கள் இதைப்பற்றி அழகுறக்கூறினார். நாடகக்கலை அபிவிருத்தி அடையவேண்டுமென்றால், நாடகக்கலையின் முக்கியஅங்கமாகவிளங்கும் நடிகர்களுக்கு, நல்லசம்பளம், வாழ்க்கைவசதி, முதலியன கிடைக்கவேண்டும். இலாபப்பங்கீடும் தரப்படவேண்டும். இவைகளைச் செய்யப் பெரியகம்பெனிகள் முன்வருமா, என்பதுசந்தேகம். அவைகள், கலைஅபிவிருத்தி என்றால், சீனுக்குமேல் சீன், கலர்விளக்குக்குமேல் கலர்விளக்குஅமைப்பது என்றமுறையிலே, வருமானத்தை மேலும் மேலும் நாடக இயந்திரத்திற்கே செலவிடுகிறார்கள். அந்த இயந்திரம் பிரமாண்டமாகிவிடுகிறது. அதன் பசியை அடக்கவே அவர்கள் முயலுகிறார்கள், ஆகவே அவர்கள், நடிகர்களின், நாடகத்தொழிலாளரின் வாழ்க்கை அபிவிருத்திக்கான வழிவகை செய்யமுன்வருவதில்லை. அவர்களின்வரவு செலவுக் கணக்குப்புத்தகம், இத்தகைய கலைஅபிவிருத்திக்குத் தூண்டுவதில்லை. பங்குதாரர்கள்கொண்ட ஒரு லிமிடெட்கம்பெனி அமைக்கப்படவேண்டும். அதிலே சீர்திருத்த நாடகங்கள்நடத்தப்படவேண்டும். அதன்வருவாயை நாடகத்தொழிலாளருக்கு (போனசாக) இலாபப் பங்கீடாகத்தரவேண்டும். அப்போதுதான், திருப்தியான மனமுடைய நடிகர்கள் இருப்பார்கள், நடிப்பு நேர்த்தியாகஇருக்கும், நாடகக்கலையும் வளரும். வேதனைநிரம்பிய வாழ்க்கையிலே உள்ள வித்வான்பாடுகிறகாம்போதிகூட முகாரியாகத்தானே இருக்கும்! அதுபோலத்தான், நடிகருக்கும் நிம்மதிவேண்டும், வாழ்க்கையிலே. நிச்சயம்வேண்டும் தொழிலிலே. எத்தனையோ நல்லநடிகர்கள், குரல் கெட்டுவிட்டதாலோ, கம்பெனிச் சட்டதிட்டமீறிவிட்டதாலோ, நடிகராகஇருந்த நிலைபோய், நடுவீதிகளில் திண்டாடக்காண்கிறேன். பத்து வருடங்களுக்கு முன்பு பிரபல நடிகராகஇருந்துவிட்டு, இன்று பிழைக்கும் வழியுமற்றுள்ள மாஜி நடிகர்களையும்பார்க்கிறேன். மீசையைத் தடவியபடி, நானுந்தான் இராஜபார்ட்டாகஇருந்தேன் என்று கூறிக்கொள்வதைவிட அவர்களுக்கு வேறோர் சுவைஇல்லை. இப்படி நடிகரின்வாழ்வு நொடித்துப்போகிறதென்றால், எப்படி, படித்தவர்க

## கலையின் நிலைகுறித்து அண்ணாத்துரை பேச்சு

(5-ம்பக்கத்தொடர்ச்சி.)

ளும் பண்புள்ளவர்களும், நாடகத்தொழிலிலே ஈடுபடமுடியும். "என்மகனை நடிகனாக்கமாட்டேன்" என்று என்நடிகத்தோழரொருவர் கூறினார் என்று சொன்னேனே, அதன் காரணம் இதுதான், ஆகவே, நாடகக்கலை அபிவிருத்தியிலே அக்கரைகொண்டவர்கள், முதலிலே,முக்கியமாகக் கவனிக்கவேண்டியது; நடிகர்களின்நாடகத்தொழிலாளரின் நலத்தைத்தான்-அது நடைபெற்றால்தான், நாடகக்கலை முன்னேறும்.

சர்க்காரும் பொதுமக்களும், நாடகக் கலைக்கு உதவிசெய்யவேண்டுமென்று நான் சொன்னேன். அந்த உதவியை நாடகக்கலையினர்பெறவேண்டுமென்றால், அதற்கு ஈடாகஅவர்கள் பயனுள்ள காரியத்தைச் செய்யவேண்டும். அப்போதுதான் அந்த உதவிகிடைக்கும். இன்றுநடத்தப்படும்நாடகங்கள், பெரிதும் புராணங்கள். இவைகளைக்காண்பதால் மக்களுக்கு என்னபயன் உண்டு? மூடப்பழக்கவழக்கங்கள் வளரத்தானே இந்த நாடகங்கள் பயன்படுகின்றன. அறிவுவளர்ச்சிக்கான நாடகங்களை நடத்தினால், நான் முன்புகூறியபடி, நாடகக்காரர்களை, நாமும், சர்க்காரும், செல்வவான்களும், ஆதரிக்கவேண்டியதுதான். ஆகவே, சமுகசீர்திருத்த நாடகங்களையே, பெரிதும், நாடகக்காரக்கள் நடத்தவேண்டும். அதுதான் கலைஅபிவிருத்தி. இந்த உணர்ச்சி எங்கும்பரவியிருக்கிறது, நாடகக்கம்பெனிக்காரர்களிடம் கூட. காலையிலே நான், நவாப் T. S. இராஜமாணிக்கம் அவர்களோடுபேசிக்கொண்டிருந்தேன். அவர் நடத்திவரும் "ஐயப்பன்" என்ற நாடகத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டுவிட்டு, "அதுபுராணமாக இருந்தபோதிலும், நான், அதிலே, எவ்வளவோ மாறுதல்கள்புகுத்தி, கூடுமானவரையில் சீர்திருத்தம் செய்திருக்கிறேன்" என்றுசொன்னார். கூடுமானவரையிலே சீர்திருத்தம் செய்திருக்கிறேன், என்று என் நண்பர் நவாப் இராஜமாணிக்கம் கூறிடக்காரணம்என்ன? நாடு, சீர்திருத்தநாடகங்களைக்காணவிரும்புகிறது, என்பதை அவர் உணர்ந்திருக்கிறார், அதற்கேற்றபடி, நாடகக்கலையைத் திருத்திஅமைக்கமுயலுகிறார் என்பதுதான் அதன்பொருள். இந்த உணர்ச்சிபரவியே தீரும். கூடியசீக்கிரத்தில், புராணநாடகங்களை நடத்தமுடியாதஅளவு, மக்களிடையே, சீர்திருத்த ஆர்வம் பிறக்கத்தான்போகிறது. புராணநாடகங்களை நடக்கமுடியாதபடிசெய்யவும்முடியும். அதுசுலபம். பொதுமக்கள் இனிச், சீர்திருத்தநாடகம் நடத்தினால் அதிகவருவாய் கிடைக்கவில்லை என்று கம்பெனிகள் சொல்வதற்கில்லாதமுறையிலே, சீர்திருத்தநாடகங்களை ஆதரிக்கவேண்டுகிறேன். சர். சண்முகம் கூறினார், எந்தநாடகத்திலே பார்த்தாலும் நாரதர் வந்துவந்துபோகிறார்! இத்தகைய புராணநாடகங்களைப்பார்க்கத்தான் பிடிக்கவில்லை. சீர்திருத்தக்கருத்துகொண்ட நாடகங்கள் ஆயிரக்கணக்கிலே தயாரிக்கலாம், என்று. சீர்திருத்தவிஷயத்திலே மூன்று வகையினர். ஒருசாரார், சீர்திருத்தமேகூடாது என்பவர்கள், இவர்கள் நமது பூஜைக்குரியவர்கள்! இரண்டாவது சாரார், சீர்திருத்தம்வேண்டும், ஆனால் செய்யமுடியவில்லையே என்பார்கள், இவர்கள் நமது அனுதாபத்துக்குரியவர்கள், மூன்றாவது சாரார், சீர்திருத்தம்வேண்டும் ஆகவே அதைச் செய்யவேண்டும்என்பார்கள், இவர்கள் நம்மவர்கள். இந்த மாநாட்டிலே முதல்ரகம் இருக்கமுடியாதுஎன்று நம்புகிறேன். ஒருவரிருவர் இருப்பினும், நாளையதினம்வேண்டுமானால், அந்தரகத்திலே இருப்பவராகக் காட்டிக்கொள்வார்களேயொழிய, இன்று இங்குள்ள உணர்ச்சியைக் கண்டுகொண்டிருக்கும்நேரத்திலே சீர்திருத்தம்வேண்டாம் என்று கூறமாட்டார்கள். சீர்திருத்தஆர்வம் இன்று எங்கும் நிரம்பஇருக்கிறது. இதனை நாடகக்காரர்கள் உணரவேண்டும். மேலும் மேலும் புராணநாடகங்களை நடத்திவருவது நாட்டுக்குப் பயனளிக்காது. மூடப்பழக்கவழக்கங்களை ஒழிக்கவேண்டும் என்று சர். சண்முகம் கூறினார். எந்த மூடப்பழக்கவழக்கங்களை ஒழிக்கவேண்டுமென்று, கலாரசிகர்கள் விரும்புவதாகக் கூறுகிறார்களோ, எந்த ஜாதிவித்யாசத்தைப் போக்கவேண்டுமென்றுகலாவாணர்கள் விரும்புவதாகச் சொல்கிறார்களோ, அந்த மூடப்பழக்கவழக்கமும் ஜாதி வித்தியாசமும் ஆகியபல கேடுகள், புராணநாடகங்களால், மக்களிடைபரப்பப்படுகின்றன. ஆகையினால்தான் அத்தகைய நாடகங்கள்கூடாது என்றுகூறுகிறோம்.

இராமாயணம், பாரதம், பெரியபுராணம் போன்றவைகள் புளுகுகள்தான், என்றாலும் அவைகளிலே கலைஇருக்கிறது, என்று கூறிவிட்டு, அவைகளைக் கொளுத்தினால், மூடப்பழக்கவழக்கங்களைப் போக்கடிக்கமுடியாது என்று சர். சண்முகம் காலையிலேபேசினார். கலைவிஷயமாக, எனக்கும் என்னைச்சார்ந்தவர்களுக்கும்உள்ள அபிப்பிராயத்திற்கும், தலைவர் சர். சண்முகம் அவர்களின் அபிப்பிராயத்திற்கும், பேதம்இருக்கிறது. இதுகுறித்து எனக்குச் சந்தேகம் இருந்தது. காலையிலே அவருடைய பேச்சைக்கேட்டபிறகு, அபிப்பிராய பேதமிருக்கிறதுஎன்பது தெளிவாகத்தெரிந்துவிட்டது. இராமாயணம், பெரியபுராணம் ஆகியவைகள் புளுகுகள், அவைமக்களின்மனதைப் பாழ் செய்கின்றன, ஒரு இனத்தை ஒருஇனம் ஆதிக்கம் செய்யவேலைசெய்கின்றன, என்பதற்காக, அவைகளை மக்கள் வெறுக்கவேண்டும், கண்டிக்கவேண்டும், என்பதைக்காட்ட, ஒருகண்டனக் குறியாகவே, அவைகளைக் கொளுத்தவேண்டுமென்று நாங்கள் கூறுகிறோமேயன்றி, அவைகளைக் கொளுத்திவிடுவதாலேயே மூடப்பழக்கவழக்கம்போய்விடும்என்று நாங்கள் சொன்னதில்லை, அவ்வளவு பைத்தியக்காரர்களல்ல நாங்கள். இப்புராணங்கள், ஒரு இனத்தின் உயர்வுக்கு ஆதாரவாக இருக்கிறதென்பதற்காக, அவைகளை மக்கள் கண்டிக்கிறார்கள் என்பதைக்காட்டவே, தீயிலேபோடச்சொல்கிறோம். யாரோ ஒருவர், ஒருபடை எடுப்பின்போது, படிப்பகம்ஒன்றைக் கொளுத்தினான். அதுபோலஇது, என்று சர். சண்முகம் கூறினார். அவரால் பயிற்றுவிக்கப்பட்ட நாங்கள் அத்த

(A-பக்கம் பார்க்க.)

## படமும் பாடலும்

3-ம் பக்கத்தொடர்ச்சி.

தப்படம் காட்டுகிறது, என்றே கருதுவோம், வாதத்திற்கு! இந்தப் படமும் பாடமும் உண்மை என்றாலுங்கூட, ஒரே தேசமாக இருப்பதைப் பலபிரிவுகளாக்கி தனிஅரசுகள் பல அமைத்தால், கேடு என்ன நேரிடமுடியும் என்றுகேட்கிறோம். மக்களின் வசதிக்குத்தானே நாடு! நாட்டின் அமைப்புமுறையைத் திருத்தினால், மக்கள் சுகம்பெற முடியுமென்றால் நாட்டின் அமைப்பைமாற்றுவதுதானே அறிவுடைமை. இதனை ஆங்கிலர் மறுக்கிறார்கள். மதியை அவர்கள் விலக்கிவிடவில்லையே, இன்று பாகிஸ்தான், திராவிடநாடு, என்ற தனிஅரசுகள் அமைக்கவேண்டும் என்ற கிளர்ச்சி தோன்றியிருப்பதற்குக் காரணம், மக்களுக்குச் சுகம் தரும்விதமாக, நாடுஅமைக்கப்படவேண்டும், என்பதன்றி வேறென்ன! என், இந்த, நியாயமான, அறிவுக்குப் பொருத்தமான, பிறப்புரிமையை ஆதாரமாகக் கொண்ட, கிளர்ச்சியை, ஆங்கிலர்கள், மதிக்க மறுக்கிறார்கள் என்று கேட்கிறோம், அவர்களையல்ல, நமது மக்களை. ஆங்கிலர் மட்டுமல்ல, ஏனைய நாட்டினரும், கேட்டால், "ஆம்" என்று கூறும் அளவு பிரிவினைக்கிளர்ச்சி வலுக்கவில்லை. வலுப்பெறு முன்னம், இந்தவாதப்பிரதிவாதம் நிகழத்தான் செய்யும்.

வேவல்பிரபுவின், சட்டசபைச் சொற்பொழிவும், பூகோளப்பாடபோதனையாகத்தான் இருக்கிறது. நமது வைசிராய் அவர்கள், வந்தவுடன் மக்களிடம் தொடர்பு உண்டாக்கிக்கொண்டார், மக்களின் நிலைமையை உணர்ந்திருக்கிறார். ஆனால் அவருடைய அலுவலகத்திலே, அந்தப் பூகோளப்படம், இருக்கிறது! படத்தைப்பார்க்கிறார், பாடத்தைப் போதிக்கிறார். இதே படத்தைப் பலப்பல ஆண்டுகளாகப் பார்த்துவந்ததும், அதே படத்திலிருந்து வேறுவிதமான பாடங்களைப்பெற்ற, ஜனாப்ஜின்னா, பெரியார் இராமசாமி, ஆகியஇரு தலைவர்களையும், நமது வைசிராய் அவர்கள் அழைத்துப்பேசினால், படம்புகட்டும் பாடம் இதுஎன்று, அவ்விருவரும், வைசிராய் அவர்களுக்குக் கூறுவார்கள். "நான் சொல்பவை, முடிந்தமுடிபுகளல்ல" என்று, வைசிராய் கூறியிருக்கிறார். ஆம்! அவைகள் பெரிதும், மாற்றத்தக்குரியன! எனவே, மே. த. வைசிராய் அவர்கள், பூகோளத்தின் துணைமட்டுமே போதுமென்றுகொள்ளாமல், இவ்விரு தலைவர்களையும், கலந்துபேசினால், இந்தத் தனிஅரசுவேட்கை, இனத்திற்கோர் இடம் என்றகொள்கை, ஏன் உண்டாயிற்று, எந்த ஆதாரத்தின்மீது இதனைக்கூறுகிறார்கள், என்ற விஷயங்களை உணரமுடியும்.

(A பக்கம் பார்க்க)

# சென்னை ஜஸ்டிஸ் மாநாடு.

சென்னை, "சௌந்தரிய மஹாலில்" சென்னை நகர ஜஸ்டிஸ் மாநாடு 13-2-44 காலை 9-30 மணிக்குத் தோழர் C. N. அண்ணாத்துரை தலைமையில், விமரிசையாக நடைபெற்றது. குமாரராஜா சர். M. A. முத்தையாசெட்டியார், தோழர்கள் நல்லசிவம்பிள்ளை, J. S. கண்ணப்பர், சக்கரபாணி நாயுடு, பாரிஸ்டர் ரங்கராமானுஜம், ஆகியோரும் ஏராளமான வாலிபர்களும் மாநாட்டில்கலந்துகொண்டனர்.

செங்கற்பட்டு ஜில்லாபோர்டு தலைவர் தோழர் T. சண்முகம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்.

தோழியர் இந்திராணிபாலசுப்பிரமணியம் அம்மையார், ஜஸ்டிஸ்கொடியை ஏற்றிவைத்தார்.

பெரியார் மாநாட்டைத் திறந்துவைத்தார்.

சர். குமாரராஜா, பாரிஸ்டர்ரங்கராமானுஜம், தர்மாம்பாளம்மையார், திருப்பூர் மொய்தீன், ஆகியோர், மாநாட்டுக்குத்தலைமைவகிக்கத் தோழர் அண்ணாத்துரையைப் பிரேரேபித்தனர்.

தோழர் C. N. அண்ணாத்துரையின் தலைமைப் பிரசங்கத்திற்குப்பிறகு,மாநாடு இடைவேளை உணவுக்காகக் கலைந்து, பிற்பகல் 3-30மணிக்கு மீண்டும் கூடிற்று.

சென்னைநகர மேயராக இருந்தவரும் தொழிலாளர்தலைவருமான காலஞ்சென்ற தோழர் C. பாசுதேவ் அவர்கள் படத்தைத் தொழிலாளர்தலைவர் தோழர் நடேச முதலியார் திறந்துவைத்தார்.

சர். A. T. பன்னீர்செல்வம் படத்தைத்தோழியர் அமிர்தவாசகம் சௌந்தரியம்மாள் திறந்துவைத்தார். திருச்சித் தோழர் T. P. வேதாசலம் அவர்கள் "திராவிடநாடு" படத்தைத் திறந்துவைத்தார்.

திருவாரூர்த்தீர்மானங்களை இம்மாநாடு மீண்டும் வலியுறுத்துகிறது.

திராவிடநாடுபிரிவினைக்குப் பயன்படத் திராவிடர் தொண்டர்படை ஒன்றுநிறுவ வேண்டுமென்று சேலத்தில்கூட இருக்கும் மாகாண மாநாட்டுக்குச் சிபாரிசு செய்கிறது.

ஐ. சி. எஸ். உத்தியோகத்தில், கிருஸ்தவருக்கும், முஸ்லீம்களுக்கும் குறிப்பிட்ட அளவு ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பது போலத், திராவிடருக்கும் வைக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

சமீபத்தில் காலியாக இருக்கும் 3 ஹைக்கோர்ட் ஜட்ஜுகள் ஸ்தானத்திற்கு முஸ்லீம், கிருஸ்தவர், பார்ப்பனரல்லாதார் ஆதித்திராவிடர்ஆகியவகுப்பினரையே நியமிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

சென்னை நகரில், விறகு ரேஷனிங் முறையைத்திருத்தி அமைக்கும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

தொழிலாளர்களுக்கு, வாழ்க்கைவசதி உயருபடியான அளவு கூலிவிகிதத்தை அதிகப்படுத்த வேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சிக்கு இனி, திராவிடர் கழகம் என்று பெயரிடவேண்டும் என்ற பல தீர்மானங்கள் நிறைவேறின.

தாம்பரம் பகுதியிலுள்ள கிராமத்துக்குப் 'பெரியார் இராமசாமிநகரம்' என்று பெயர் சூட்டியதற்காக, செங்கற்பட்டு ஜில்லாபோர்டு தலைவர் தோழர் T. சண்முகம் அவர்களையும், அங்கத்தினர்களையும், இம்மாநாடு பாராட்டுகிறது என்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தோழர்கள் ஜீவரத்தினம், கிருஷ்ணசாமி, போளூர் சுப்பிரமணியம், திருப்பூர் மொய்தீன், பத்மநாபன் மஞ்சுளாபாய் அம்மையார் ஆகியோர் ,தீர்மானங்களைக் குறித்துப்பேசினர்.

அரசியல் நிலைமை, கட்சியின் எதிர்காலம் எனும் பொருள்பற்றி, டாக்டர் A. கிருஷ்ணசாமி, ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினர். பாரிஸ்டர் ரங்கராமானுஜம், சேலத்தில் நடைபெற இருக்கும் மாநாட்டின் வேலைகள்பற்றிப் பேசினர். பெரியார் அவர்கள் கட்சியைப்பலப்படுத்தும் முறைபற்றிச் சொற்பொழிவாற்றினர். தலைவரின் முடிவுரை, வணக்கங் கூறலுடன், மாநாடு இரவு 9 மணிக்கு இனிது முடிந்தது.

——

# சபாஷ்.

**குழந்தையம்மாள்—பெரியதாஸ்**

உங்கள் இருவரின் விதவா விவாகம் வைசியசமூகத்திலே ஓர்பெரிய புரட்சியை உண்டுபண்ணிவிட்டது.

அநேக வருஷங்களாக, நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு, மதத்தின்பேராலும், சமூகத்தின்பேராலும், கட்டுப்பட்டு அநேக கோடி விதவைகள் கண்ணீர்விட்டுக் கதறியும் கண்டறியாத புதுமையை கண்டநிந்த விதவை சகோதரிகளும், சீர்திருத்தவாதிகளும் உங்களுடைய முன்னேற்ற செய்கையைப்பார்த்து எவரும் ஆச்சரியப்படுவார்களென்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

சமூகக்கட்டுப்பாட்டை உதறித் தள்ளிய சகோதரியே! தங்களுக்கு விவாகமாகிய சமார் 15 நாளில் விதவையாகி, சமூகத்தின் நிர்ப்பந்தத்தால், மீண்டும் இயற்கை இன்பத்தை அனுபவிக்கமுடியாமல் அநேகவருஷங்களாக அவதியுற்று, அல்லற்பட்டு, சமூகத்தையும், கட்டுப்பாட்டையும்மீறி, விதவா விவாகம் அவசியம் என்பதையும் உணர்ந்து தாங்களே விதவாவிவாகம் செய்துகொண்டதுபற்றி எங்கள்மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம். உங்கள்போன்ற விதவைகளாகஇருக்கும் பாலியமாதுகளுக்கும் ஓர் வழியைக்காண்பித்தீர்கள். விதவா விவாகத்திற்கு அல்லும் பகலும் பாடுபட்டு, தங்கள் முயற்சியில் கொஞ்சமும் தளராமல், கருமமே கண்ணாயிருந்து, தாங்களே விதவைகளின் துயர்தீர வீரத்துடன் விவாகம் செய்துகொண்டதை உலகம்உள்ளளவும் உங்களைப் பெண்உலகமும், சீர்திருத்தவாதிகளும், என்றும் போற்றுவார்களென்பதில் ஐயமில்லை என்று விதவாவிவாகத்தைப் பாராட்டித் தோழர்D. மகாலிங்கம், பரமக்குடி, எழுதுகிறார்.

——

# புவனகிரி.

6—2—44 ஞாயிறுகாலை 10மணிக்கு புவனகிரி, திராவிடவாலிபர்கழகத்திறப்பு விழா நடைபெற்றது. மாபெரும் ஊர்வலத்திற்குப்பின், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், திராவிட இனஎழுச்சியின் இன்றியமையாமையைக்குறித்து ஓர் நீண்ட சொற்பொழிவாற்றிக் கழகத்தைத்திறந்து வைத்தார்கள். P. சனர்த்தனம்B.A.அவர்கள் பேசியபின் தலைவர் முடிவுரையுடனும் நன்றிகூறலுடனும் கூட்டம் முடிவடைந்தது. ஆரூர், பாலசுந்தரபாவலர் மகன் தோழர் தமிழரசன், இன்னிசை பாடி மகிழ்வித்தது குறிப்பிடத்தக்கது.

## யூனியன் பஞ்சாயத்து நிலையத்தார் வரவேற்பு.

மாலை 5மணிக்கு, புவனகிரி பஞ்சாயத்துக்குழுவினர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை வரவேற்புரையால் சிறப்பித்தனர். பெரியார் பதிலளிக்கையில், மக்களுக்கு ஆற்றவேண்டிய அரும்பணிகளை விரிவாகப்பேசினார்கள். போர்டுத்தலைவர்முடிவுரையுடன் கூட்டம் இனிதுமுடிந்தது.

## பொதுக்கூட்டம்.

மாலை 7-மணிக்கு, கூட்டம்ஆரம்பிக்கப்பட்டது. புவனகிரி தோழர் இராமனுதன் அவர்கள் தலைமைவகித்தார்கள். தமிழரசன் இன்னிசைக்குப்பின், பெரியார் அவர்களுக்குப்பற்பலவரவேற்புரைகள் படித்தளிக்கப்பட்டன. வேலூர், C. P. சிற்றரசு, ஆரூர் பாவலர், சென்னை சனர்த்தனம் B. A; தில்லை அன்பழகன் ஆகியோர் பேசியபின், பெரியார் அவர்கள் 2-மணி நேரத்திற்குமேல் சொற்பொழிவாற்றினார்கள்.

புராணம்கண்டு களைத்தீர்கள்! பழமை கண்டுசலித்தீர்கள்!

இதோ புதுமை விருந்து!

ஆரியப்பாட்டு!
மடத்தலைவர்கள் லீலை!
தமிழர் தவிப்பு!
ரசவாத மோசடி!
புரோகிதப்பித்தலாட்டம்!

ஆகியவைகளை விளக்கும்
அறிவு வளர்ச்சி நாடகம்!

சந்திரோதயம்

சென்னை
வி. பி. ஹாலில்
27-2-44 ஞாயிறு
மாலை 5-மணிக்கு நடைபெறும்.

நகைச்சுவை அரசர் தோழர்
என். எஸ். கிருஷ்ணன்
அவர்கள் தலைமை வகிப்பார்.

தோழர்கள்.
C. N. அண்ணாத்துரை.
C. V, M. அண்ணாமலை,
C. V. இராஜகோபால், போளூர் சுப்பிரமணியன், T. P. S. பொன்னப்பன், ஈழத்தடிகள், G. துரைக்கண்ணு, G. சீனுவாசன், வெங்கட்ருமன், கோவிந்தராஜன், சாமிநாதன், சுந்தரேசன், முனுசாமி, ஏகாம்பரம், பார்த்தசாரதி, நாராயணசாமி
ஆகிய இயக்கத்தோழர்கள் பலர் நடிக்கின்றனர்.
ஆர்மோனியம்—சண்முகானந்தா,
தபேலா—ஆபீலா

டிக்கட்-ரூபா 5, 3, 2, 1.

கிடைக்குமிடங்கள்
P. A. K. பழனிச்சாமி,
நெ-20 தனுக்கன் தோட்டம்3-வது சந்து,
இராயபுரம், சென்னை.
C. K. வைத்திய லிங்கம்,
எண்ணெய்மண்டி, 142-ஆதியப்பநாயகன்தெரு,

திரு
வத்திபுரம்,
திருச்சி,
தில்லை,
ஈரோடு ஆகிய
இடங்களிலே
தோழர்கள்
கண்டுகளித்தனர்
சென்னைத்
தோழர்களே!
காணத்தவறாதீர்
கள்!! காதுக்கும்
கண்ணுக்கும்மட்டு
மல்ல விருந்து; கருத்
துக்கு விருந்து;
ஆரியமெனும்நோயை
ஓட்டும் மருந்து.
கதைதீட்டியவர்,
C. N. அண்ணாத்துரை.

## பம்பாய் தெ. இ. ஆ. தி. வா. கழகம்.

7—2—44ல் டை கழகத்தின் 8-வது ஆண்டு முதல் பாதாந்தர விசேஷப் பொதுக்கூட்டம், தோழர் S. ஜோசப் ஜார்ஜ் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், கழகத்தின் சகல பொறுப்புகளையும், புதியநிர்வாகஸ்தரிடம் ஒப்படைக்கப்பட்டதோடு, காரியதரிசியால், ஆண்டு விழாச்செலவுகளை வாசிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தோழர் C. S. T. இராஜா, அவர்களால் கழகத்தின் வளர்ச்சிக்குரிய பல திட்டங்களை எடுத்துக்கூறியதும், புதிதாய் 15 பேர்களைக் கழகத்தின் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பின்னர், தமிழர் நலன்கருதியும், கழகத்தின் வளர்ச்சிக்கருதியும் நெல்லை ஜில்லா, பொன்னூர்முடி, ஆதிதிராவிடர்களுக்கு மறவர்களால் இழைக்கப்படும் இன்னல்கள் எடுத்துக் கூறப்பட்டபின், தோழர் K. S. பாலகிருஷ்ணன் நன்றி கூறக் கூட்டம் கலைந்தது.

—

## சிதம்பரத்தில் பெரியார் ஈ. வெ. ரா.

இந்நகரில் டவுன்ஹால் தோட்டத்தில் 7—2—44ல் திட்டமிட்டிருந்த பொதுக் கூட்டத்தைமாற்றி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத்தமிழ்ப்பேரவை, இலக்கிய மன்றத்தின் சார்பில் 7—2—44 மாலை 7-க்கு பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் திருவாளர் K. சுப்பிரமணிய பிள்ளை M. A, M. L; அவர்கள் தலைமையில் "தமிழிசை" என்பதுபற்றியும் அதைஅடுத்து "கீழ்நாடும் மேல்நாடும்" என்பதாகவும் சுமார் 2-மணிநேரம் பேசினார்கள். பட்டமளிப்பு மண்டபம் நிறைந்த கூட்டமிருந்தது. தமிழ் மொழியும் தமிழிசையும், மக்களின் ஒற்றுமை உணர்ச்சிக்கும் உழைப்புத் துறைக்கும் உலகநவீன அபிவிருத்திகளுக்கும் உதவுவதாக அமைக்கப்படவேண்டும் சிவபெருமான் சொன்னது திருமால் சொன்னது என்று பழய நூல்களையே கிளறிக்கொண்டு,பஜனைப்பாட்டுகளுக்காகவே தமிழிசை அமையுமானால் நாட்டு மக்கள் நிலை பிற்போக்குத்தான் அடையுமென்று பலநகைச்சுவை ததும்பிய எடுத்துக்காட்டுகளோடும், கைதட்டுதல்களுக்கிடையேயும் பேசியபின், தலைவர் முடிவுரைநன்றி கூறலுடன் சிறப்பாக இனிது கூட்டம் முடிந்தது.

இரவு சிதம்பரத்தில் ஓர் விருந்தில் கலந்துகொண்டு பின் ஈரோட்டுக்குசென்றார்கள்.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.